பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை 10.12.2021 கதிர் 35

**இது ரகசியம் அல்ல!**

நீலிக் கண்ணீர் அல்லது முதலைக் கண்ணீர் என்பார்கள். அப்படிக் கண்ணீர் வடிப்பவர்களில் பெரும்பாலும் முன்னிலையில் இருப்பவர்கள் அரசியல்வாதிகள் தான். அந்த வகையில் இந்த உதாரணம் ஒன்று.

"புனர்வாழ் பக்கம்02

## சர்ச்சைக்குரிய முன்னாள் தளபதி கரன்னாகொடவுக்கு ஆளுநர் பதவி

### ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம்



பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒஃப் த ஃபிலீட் மார்ல் வசந்த கரன்னாகொட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று பதவிப்பிரமாணம் செய்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான 11

## 'பட்ஜட்' மீது இன்று இறுதி வாக்கெடுப்பு

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான (இறுதி) வாக்கெடுப்பு இன்று வெள்ளிக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசின் 11



# தமிழர்கள் எந்த இனத்துக்கும் அடுத்தபடியான மக்கள் அல்லர்

## இலங்கை எமது நாடு என்று சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

இலங்கை எனும் இந்த நாட்டில் தமிழர்களாகிய எமக்கும் சம உரிமைகள் உள்ளன. இது எமது நாடு. இங்கு நாம் எந்தவொரு இனத்தவருக்கும் அடுத்தபடியான மக்கள் அல்லர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 11



## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜப்பானின் புதிய தூதுவர் பேச்சு



இலங்கையில் பயிற்சி பெற்ற பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்துவதற்கு ஜப்பான் அரசு ஆர்வமாக உள்ளது 2

## அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும்

### அரசிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதற்கான அரசியல் தீர்மானமொன்றை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் உரையாற்றிய அவர் நீதி 2



## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதானவர்களை விடுதலை செய்க

### சபையில் ரிஷாத் எம்.பி. வேண்டுகோள்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, சிறையில் வாடும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களவர்களை விடுதலை செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

நேற்று நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது 11



## மின்சார வேலியில் சிக்கி 2 பிள்ளைகளின் தாய் பலி



மின்சார வேலியில் சிக்கி இரு பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை 11

## 22 பேர் சாவு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 11

## அரசியல் கைதிகள் விடயத்தில் பொறுப்புடன் செயற்படும் அரசு

### சார்ள்ஸின் கருத்துக்கு நாமல் பதில்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான கைதிகளின் விடயத்தில் உரிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும், விடுதலை தொடர்பிலும் அரசு பொறுப்புடையதாக உள்ளது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சின் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11



## வேகமாகப் பரவாது ஒமைக்ரோன் திரிவு

ஒமைக்ரோன் வகை திரிவு இலங்கையிலும் பிற நாடுகளிலும் வேகமாகப் பரவாது என ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார். 11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரிய வசதிகளை அரசு செய்து கொடுக்கவில்லை. அத னால் அவர்கள் பலரும் கையேந்தி பிச்சை யெடுக்க வேண்டிய – யாசகம் கேட்க வேண்டிய – அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்றத்தில் நீலிக் கண்ணீர் வடித்திருக்கின்றார் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

அவர் சுட்டிக்காட்டிய விடயம் உண்மைதான். அரசிடம் கேள்வி கேட்கப்பட வேண்டிய விடயம்தான் இது.

ஆனால் அப்படிக் கேள்வி கேட்கும் தகுதி நிலையில் தாங்கள் – தாம் உட்படக் கூட்டமைப்பினர் – இருக்கின்றார்களா என்பதை அவர் ஒரு தடவை தங்களைத் தாங்களே கேட்டுவிட்டு அரசிடம் வினா வெழுப்பியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

பௌத்த, சிங்கள அரசைப் பொறுத்த வரை இந்தப் போராளிகள் அரசுக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போராடியவர்கள். அவர்களில் பன்னீராயிரம் பேரைத் தண்டிக்காமல், புனர்வாழ்வளித்து, குடியுரிமையைப் பறிக்காமல், சமூகத்துடன் ஒன்றித்து வாழ அனுமதித்ததே ஒரு தாராளம்தான்.

அரசைப் பொறுத்தவரை அவர்கள் அரசுக்கு வன்முறை வழி எதிரிகள் என்றாலும் கூட, அவர்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் போது அவர்களுக்கான வாழ்வாதரங்களைத் தேடிக் கொடுப்பதும் கூட அரசின் கடமைதான்.

ஆனால் அதனைத் தட்டிக் கேட்கும் தகுதி நிலையை செல்வம் அடைக்கலநாதன் போன்ற கூட்டமைப்பினர் பேணினாரா என்பதுதான் கேள்வி.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்றவை எல்லாம் ஒரு காலத்தில் புலிகளினால் தடை செய்யப்பட்டவை. ஆனால் பிற்காலத்தில் தலைவர் பிரபாகரன் அந்தத் தடைகளை எல்லாம் நீக்கி, 'மறப்போம், மன்னிப்போம்' என்ற தாராள அடிப்படையில் எல்லோரையும் அரவணைத்தார்.

அந்த அரவணைப்பில் கிட்டிய பிச்சைதான் செல்வம் போன்றோரின் இன்றைய அரசியல் வாழ்வும் செல்வாக்கும்.

ஆனால் அந்த உயர்ந்த தலைவனின் வீர மறவர்களுக்கு – இப்போது செல்வமும் சேர்ந்து நீலிக்கண்ணிர் வடிக்கும் முன்னாள் போராளிகளுக்கு – பிரதியுபகாரமாக செல்வமும் ஏனைய கூட்டமைப்பின் தலைவர்களும் காட்டிய அரவணைப்பு என்ன? அவரவர்களே தத்தமது நெஞ்சைத் தொட்டுச் சொல்ல வேண்டிய விடயங்கள் இவை.

ஒன்று, இரண்டு போராளிகள் அல்லர். பன்னீராயிரம் போராளிகள்.

தமிழரின் அரசியலில் தங்கள் வாழ்வைக் கொண்டு நடத்தும் சம்பந்தன், மாவை, செல்வத்திலிருந்து கஜேந்திர குமார், கஜேந்திரன், விக்கினேஸ்வரன் வரை அனைவருமே இந்தப் போராளிகளில் எத்தனை பேரை அரவணைத்தார்கள்? எத்தனை பேருக்கு அரசியல் வாழ்வுக்கு சந்தர்ப்பமளித்தார்கள்? குறைந்த பட்சம் ஒரு கட்டமைப்பாக அவர்கள் சமூகத்தில் மேலெழுவதற்கு வாய்ப்பளித்தார்களா? வாய்ப்பளிக்க வேண்டாம், கொள்கை ரீதியிலாவது வாய்ப்பளிக்க வேண்டும் என்று வற்புறுத்திப் பகிரங்கமாகக் கருத்தாவது வெளியிட்டார்களா?

அந்தப் போராளிகளும், அவர்களின் தலைவனும் முன்னெடுத்த அரசியல் விடுதலைப் போராட்டத்தை தமது அரசியல் பிரசார நடிப்புக்கு முன்னிறுத்தும் இந்த அரசியல்வாதிகள் எவரும், அந்தப் போராளிகளுக்கு தமிழர் அரசியலில் முன்னின்று வழிகாட்டும் முழுத் தகுதிகள் இருந்தும், அதற்கு இடமளித்து வாய்ப்பளிக்கத் தயாராக இல்லை. அந்த வாய்ப்புகள் அவர்களுக்கு கிட்டி, அவர்கள் அரசியல், சமூக வழிகாட்டிகளாக மேலெழுந்து விடக் கூடாது, அதைத் தடுக்க வேண்டும் என்று திட்டமிட்டுத்தான் இவர்கள் காரியமாற்றுகின்றார்கள் என்பது வெளிப்படை.

இனத்துக்காகத் தம்மையே துறக்கத் தயாராக விளங்கிய அவர்களுக்குத்தான் இனத்தை வழிநடத்தும் முதல் பாத்தியத்தை இருக்கின்றது.

நீதியரசர் விக்கினேஸ்வரனாவது கடந்த பொதுத் தேர்தலில் முன்னாள் போராளி ஒருவரை திருகோணமலையில் தமது கட்சியின் தலைமை வேட்பாளராக நிறுத்தி, போராளிகளுக்கு தம்மளவில் உரிய அங்கீகாரத்தை வழங்கினார்.

ஆனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் என்ன செய்தார்? இந்த விடயத்தில் மிகமிகக் கீழ்த்தரமாக – மூன்றாம் தர நபராக – நடந்து கொண்டார்.

2015 பொதுத் தேர்தல் சமயம் இந்த முன்னாள் போராளிகள் ஒரு கட்டமைப்பாக அவரை அணுகிய போது – பக்கத்தில் மாவை, செல்வம், சுரேஷ் பிறேமச்சந்திரன், சித்தார்த்தன் ஆகிய நான்கு தலைவர்களையும் வைத்துக் கொண்டு, முகத்துக்கு நேரே அவர்களைப் பார்த்து "நீங்கள் அரசுப் புலனாய்வாளர்களினால் இயக்கப்படுபவர்கள் என்று மக்கள் கூறுகின்றார்கள்" – எனப் பட்டவர்த்தனமாகக் குற்றம் சுமத்தி, விரட்டாத குறையாக அனுப்பி வைத்தவர் சம்பந்தன்.

அப்படியே சம்பந்தன் அந்த விடயத்தை விட்டிருந்தால் வேறு.

கடந்த 2020 தேர்தலில், திருகோணமலை மாவட்டத்தில் தமக்கு எதிராக முன்னாள் போராளி – முன்னாள் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் – ஒருவரை விக்கினேஸ்வரன் களத்தில் இறக்கியமையைக் கண்டதும், தாம் முன்னர் "அரசுப் புலனாய்வாளர்களினால் இயக்கப்படுபவர்கள்" எனக் குற்றம் சுமத்திய அதே முன்னாள் போராளிகளை, ஒருவரைக் கூடத் தவற விடாமல், திருகோணமலைக்கு அழைத்துத் தம்முடன் வைத்திருந்து, சேர்ந்து பிரச்சாரம் செய்து, கூடியிருந்து பத்திரிகையாளர் மாநாடும் நடத்தி வாக்குத் திரட்டினார் சம்பந்தன்.

இதில் முக்கியமான விடயம், யார் யாரை எல்லாம் அரசுப் புலனாய்வாளர்களுடன் இயங்குபவர்கள் என்று 2015 தேர்தல் சமயம் குற்றம் சுமத்தினாரோ, அவர்கள் அனைவரையுமே, ஒருவர் விடாமல் அவர் தம் தேர்தல் பிரசார வேலைக்கு மட்டும் அரவணைத்துத் திருகோணமலை மாவட்டத்தில் பிரசாரம் செய்தமையால், அவரின் எம்.பி. பதவி தப்பியது. இம்முறை ஒரு நூற்றறியைம்பது வாக்குகள் குறைந்திருந்தால் அவரும் மாவை னோதிராசாவைப் போல எம்.பி பதவியை இழந்திருப்பார்.

ஆனால், சம்பந்தனும் கூட இன்று வரை, முன்னாள் போராளிகளுக்கு அரசியலில் இடமளித்தவரோ இடமளிக்க வேண்டும் என்று சிந்தித்தவரோ அல்லர்.

இவர்கள் எல்லோரும் முன்னாள் போராளிகள் குறித்தும், அவர்களின் நலன் குறித்தும், பேசுவதற்கு அருகதையேயற்றவர்கள். நடிப்புக்கு நீலிக்கண்ணீர் வடிப்பவர்கள்.

கூட்டமைப்புக்குள் – தமிழரசுக்குள் – சி.வீ.கே.சிவஞானம் ஒருவர்தான் முன்னாள் போராளிகளுக்கு உரிய இடமளிக்கப்பட வேண்டும் என்ற அவ்வப்போது வற்புறுத்தியும் செயற்பட்டும் வருகின்றார்.

வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை ஐந்து வருடங்கள் நடத்தியவர்கள் கூட அச்சமயத்தில் முன்னாள் போராளிகளுக்குக் காத்திரமாக ஏதும் செய்யவேயில்லை.

கடைசி வரை அரச படையினருடன் நின்று, புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முழு அளவில் முன்னெடுத்த புளொட்டை, சரியாசனம் அளித்து, அரவணைத்துக் கொண்ட இவர்களால் முன்னாள் போராளிகளுக்கு அவர்களின் சமூக அந்தஸ்தை கௌரவிக்கும் விதத்தில் சரியாக இடம் கொடுக்க முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கப்படவில்லை என்று செல்வம் எம்.பி. நீலிக் கண்ணீர் வடிப்பதைப் பார்க்கையில் சிரிப்பாகத்தான் இருக்கின்றது. எரிச்சலும் வருகின்றது.

என்று தொலையும் இந்த நடிப்புகள்....?

★ ★ ★

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?

ரெலோ தரப்பினர் இப்போது கொழும்பில் உள்ள மேற்குலகத் தூதரகங்களுக்கு மாறி மாறிக் காவடி தூக்கித் திரிகின்றார்கள். அவர்களுக்குப் பொருத்தமான ஆங்கில மொழிபெயர்ப்பாளராக ஊடகப்பேச்சாளர் ஒருவர் கிட்டியதால் வந்த வினைபோலும். ஏதோ நடக்கட்டும் என்று விட்டுவிடலாம்.

ஒவ்வொரு சந்திப்பின் பின்னரும் எனக்கும் அது பற்றிய செய்தி அவர்களின் ஊடகப் பேச்சாளரினால் தவறாமல் அனுப்பிவைக்கப்படுவதுண்டு.

ரெலோவினர் தம்பாட்டில் போய் சந்தித்து விட்டு, அதனை கூட்டமைப்புச் சந்திப்பு எனக் காட்டுகின்றனர் என்று இப்பந்தியில் சுட்டியிருந்தேன்.

பிரிட்டிஷ் தூதரைச் சந்தித்து விட்டு 'கூட்டமைப்பினர் சந்திப்பு' என்ற ஊடக அறிக்கை வெளியிட்டிருந்தனர். நான் பிரிட்டிஷ் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டேன். 'இல்லை, அது ரெலோவினருடனான சந்திப்புத்தான்' – என்று தூதரகம் உறுதிப்படுத்தியது. அதையும் இப்பந்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ஒவ்வொரு தூதரகமாக அவர்கள் காவடி தூக்கி விட்டு, கூட்டமைப்பினர் சந்திப்பு என்று அறிக்கை வெளியிடுவதும், அதை ரெலோ சந்திப்பு என நாங்கள் செய்தியாக வெளியிடுவதும் வழமையான பல்லவிதான்.

நேற்று முன்தினம், அதே ரெலோ குழு, கொழும்பில் நோர்வேத் தூதுவரை சந்தித்து விட்டு 'கூட்டமைப்பினர் சந்திப்பு' என்ற வழமை போல அறிக்கை வெளியிட்டது. வழமை போல, 'சுரேந்திரன், ஊடகப் பேச்சாளர், ரெலோ – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற அறிக்கை வெளியானது. வழமை போல, அந்த அறிக்கையும் சுரேந்திரனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் ஊடகப் பேச்சாளர் போன்ற மயக்கக் கருத்தை தருவதாக இருந்தது.

அதுவல்ல விடயம். வழமையாக எனக்கும், எங்கள் பத்திரிகைக்கும் வரும் அறிக்கை, நேற்று முன்தினம் சந்திப்பு முடிவில் வரவில்லை. பிற ஊடகங்களுக்குச் சென்றிருந்தது. 'கூட்டமைப்பு சந்திப்பு' எனத் தாங்கள் ஊடக அறிக்கை வெளியிட, நாம் அது 'ரெலோ சந்திப்பு' என்ற உண்மையை அம்பலப்படுத்தி அதைப் பிரசுரிப்பதால் வந்த கோபம் காரணமாக இருக்கலாம் என்று நினைத்தேன்.

எனினும் பிற ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட அந்த ஊடக அறிக்கையைப் பார்த்தபோது அதிர்ச்சி காத்திருந்தது. அது எமக்கு அனுப்பப்படாமையின் காரணமும் புரிந்தது.

அதிலே ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைத்தலைவர்' என்று சுட்டியிருந்தார் அவ்வமைப்பின் ஊடகப் பேச்சாளர்.

இந்த ஊடக அறிக்கையை எங்களுக்கு அனுப்பினால் இந்த கூட்டமைப்பு இணைத் தலைமைப் பதவியை செல்வத்துக்கு யார் கொடுத்தார்கள்? எப்போது கொடுத்தார்கள்? – என்ற கேள்வியை நாம் எழுப்புவோம் என்று கருதியோ என்னவோ, அவர் எங்களுக்கு அதை அனுப்பாமல் விட்டு விட்டார் போலும். இப்போது சொல்லுங்கள், சோழியன் குடுமி சும்மா ஆடவில்லையல்லவா?

சரி. ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ரெலோவில் தாம் ஊடகப் பேச்சாளராக இருப்பதாலும், ரெலோ கூட்டமைப்பில் இடம் பெற்றிருப்பதாலும், கூட்டமைப்பினரதும் ஊடகப் பேச்சாளர் போல தம்மைக் காட்ட முயல்கிறார். மறுபக்கத்தில் செல்வத்தை கூட்டமைப்பின் இணைத் தலைவர் என்கிறார்.

உண்மை நிலைமை என்ன? கூட்டமைப்பின் உண்மையான பேச்சாளர் – அல்லது உண்மையான பேச்சாளராகக் கருதப்படுபவர் – இது குறித்து என்ன சொல்கிறார்?

சுவாரசியமான அந்தப் பதிலை நாளை பார்ப்போமா?

– மின்னல் –

## பிரதமர் மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என இலங்கைக்கான ஜப்பானின் புதிய தூதுவர் மிசிகொஷி ஹெதெகி தெரிவித்தார்.

அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் குறைந்த திறன் மற்றும் நிபுணத்துவம் கொண்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையே இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிக்கும் வகையில் முறையான பயிற்சி பெற்ற பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு 14 துறைகளின் கீழ் பணியாளர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தமது பதவிக்காலத்திற்குள் இந்நாட்டின் முதலீட்டை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு ஆர்வமாக உள்ளதாக மிசிகொஷி ஹெதெகி அவர்கள் தெரிவித்தார். இதுவரை இலங்கையில் 75 ஜப்பானிய முதலீட்டு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த 15 ஆண்டு காலப்பகுதிக்குள் சுமார் 382 மில்லியன் ஜப்பானிய டொலர் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதனூடாக 12,000 இற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஜப்பான் அரசின் பங்களிப்புடன் அண்மையில் திறக்கப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய விமான ஓடுதளம் மற்றும் ஓடுபாதை, கல்யாணி பொன் நுழைவாயில் மற்றும் கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ திட்டம் என்பன தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

---

## அரசியல் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் அலி சப்ரி மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரிடம் அவர் விடுத்த கோரிக்கை வருமாறு:–

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 1994இல் கைதுசெய்யப்பட்டவர்கள்கூட இன்னும் சிறையில் உள்ளனர். வழக்கு முடிவதற்கு சிரமமாக உள்ளது. விரைவாக விடுவிக்கப்படுவார்கள் என்ற உத்தரவாதம் அரச தரப்பில் வழங்கப்பட்டது. ஆனாலும், வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படவில்லை. சாட்சியங்கள் இல்லை. குற்ற ஒப்புதல் மட்டுமே பெறப்பட்டுள்ளதால் வழக்கு விசாரணை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்படுகின்றது.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அல்லது புனர்வாழ்வின் பின்னராவது விடுவிப்பதற்கான அரசியல் தீர்மானமொன்றை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.



# கல்முனை மாநகர சபையின் ‘பட்ஜட்’ 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்



கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டத்துக்கான விசேட சபை அமர்வு கடந்த புதன்கிழமை மாலை, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 41பேரில் 2 ஆசனங்கள் வெற்றிடமாக உள்ள நிலையில் 32 உறுப்பினர்கள் இந்த அமர்வுக்கு சமுகமளித்திருந்தனர்.

இவர்களில் 21 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 6 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 5 உறுப்பினர்கள் நடுநிலை வகித்திருந்தனர். 7 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 12 உறுப்பினர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 4 உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 3 உறுப்பினர்கள், ஹெலிக்கொப்டர் சுயேச்சைக் குழுவின் ஓர் உறுப்பினர் மற்றும் மான் சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவருமாக 21 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2 உறுப்பினர்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 4 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் நடுநிலை வகித்திருந்தனர்.

சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 5 உறுப்பினர்களும் தேசிய காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர், வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.

குறித்த வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப், பட்ஜட் நிறைவேற ஒத்துழைப்பு வழங்கிய உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தமையுடன் உறுப்பினர்கள் பலரும் மாநகர முதல்வருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

# உலக மண் தினத்தை முன்னிட்டு நடத்திய பொது அறிவுப்போட்டி பரிசில்கள் வழங்கல்





உலக மண் தினத்தை முன்னிட்டு, எதிர்காலத்தை நோக்கி சுற்றுச் சூழல் கழகமும் மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்திய பொது அறிவுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குரிய பரிசு வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வு பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி வேழினி பாலேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாகாண கல்விப்பணிப்பாளர், பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் ஆலோசகர், எதிர்காலத்தை நோக்கி சுற்றுச் சூழல் கழக தலைவர் லி. கேதீஸ்வரன், கழக செயலாளர் ம.சசிகரன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

# கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் பலர் குணமடைந்தனர்



இலங்கையில் கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த மேலும் 356 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 43 ஆயிரத்து 823 ஆக அதிகரித்துள்ளது.

# ‘உங்களின் பாதுகாப்புக்காக நாம்’ என்னும் திட்டம் யாழில் ஆரம்பம்



சைக்கிள்களுக்கு ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை யாழ்ப்பாண பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது.

வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக ‘உங்களின் பாதுகாப்பிற்காக நாம்’ எனும் கருப்பொருளில் சைக்கிள்களில் இந்த ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல இடங்களில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேசன் துறை வீதியில் உள்ள யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக வைத்து வீதியால் சென்ற சைக்கிள்கள் பொலிஸாரால் நிறுத்தப்பட்டு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைவாக, மாவட்ட போக்குவரத்து பிரிவு மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் போக்குவரத்து பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

# கொள்வனவு செய்த சீஸ் கட்டிகளில் புழு! நிட்டம்புவவில் சுகாதாரக் சீர்கேடு



சீஸ் கொள்வனவு செய்யும் இலங்கையர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிட்டம்புவ பிரதேசத்தில் ஒருவர் கொள்வனவு செய்த சீஸ் கட்டிகள் இரண்டில் புழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீட்டுக்குக் கொண்டு சென்று திறந்து பார்க்கும் போது அந்த சீஸ் கட்டிக்குள் இரண்டு புழுக்கள் இருந்தன எனத் தெரியவந்துள்ளது.

அதனை பரிசோதித்து பார்த்த போது இது காலாவதியான சீஸ் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொள்வனவு செய்தவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சீஸ் கொள்வனவு செய்தவர்கள் அவதானமாக இருக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

FACULTY OF SCIENCE
UNIVERSITY OF JAFFNA

Registration for General/Honours Degree Examinations,
Level 1, 2, 3, 4 in Science - 2020 (First Semester)

The above End of Course Examinations are scheduled to be held in January 2022. The Examination Timetable will be made available in the faculty website http://www.sci.jfn.ac.lk/index.php/end-of-course-timetables/.
All candidates (Proper & Repeat) of the Faculty of Science are requested to register for the above examination on or before 17/12/2021 by filling the online form which is available in the faculty website.

09/12/2021 Registrar

# வடமேல் மாகாண ஆளுநராக வசந்த கரன்னாகொட நியமிப்பு



வடமேல் மாகாண ஆளுநராக கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

வடமேல் ஆளுநராக பணியாற்றிய ராஜா கொல்லுரே உயிரிழந்தமையையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மீது குற்றச்சாட்டுகளைத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட, வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பட்ஜெட் குளறுபடி

**பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நாட்டின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி – மூன்றாவது – கட்ட வாசிப்புக்காக நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. உச்ச சிக்கலில் மாட்டியிருக்கும் நாட்டுக்கு இது முக்கியமான விடயம்.**

**'வெரிட்டே ரிசேர்ஜ்'(உண்மை ஆய்வு) என்ற சுயாதீன ஆய்வு மையம் இப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டு, விவாதிக்கப்பட்டு இன்று நிறைவேற்றப்படவுள்ள இந்த வரவு – செலவுத் திட்டம் குறித்து பக்கச்சார்பற்ற ஆய்வு ஒன்றை நடத்தி அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. அதன்படி மூன்று முக்கிய விடயங்களில் இந்த வரவு – செலவுத்திட்டம் தோல்வி கண்டிருக்கின்றது.**

*** ஒரு ஸ்திரமான நிதி நிர்வாகத்தை நிலை நிறுத்தும் முயற்சியில் தோல்வி கண்டுள்ளது.**

*** அதன் நிதிக் கணிப்பீடுகள், எதிர்வுகூறல்கள் நம்பகத்தன்மையை நிரூபிப்பனவாக இல்லை.**

*** சர்வதேச சந்தை மற்றும் மதிப்பீட்டு நிறுவனங்கள் இடையே நம்பிக்கையை உருவாக்கவில்லை.**

**ஒரு நிலையான, ஸ்திரமான, நம்பகத்தன்மையுள்ள நிதி நிர்வாக முறைமையை – கையாள்கையை – இந்த வரவு – செலவுத் திட்ட யோசனைகளும் ஏற்படுத்தவில்லை என்பதற்கான காரணங்களை அந்த ஆய்வு நிறுவனம் தனது அறிக்கையில் விலாவாரியாக விவரித்திருக்கின் றது.**

**நிதிக் கூற்றுக்கள் தொடர்பான வரவு – செலவுத்திட்ட கணிப்பீடுகள் இட்டுக் கட்டி முன்னிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஆதாரங்களோடு அது முன்வைத்திருக்கின்றது. அதனை நிரூபிக்கக் கடந்த கால முன்னுதாரணங்களை யும் அது குறிப்பிடத் தவறவில்லை.**

**இந்த ஆண்டுக்கான (2021இற்கான) வரவு – செலவுத் திட்டம் கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட போது அரசின் எதிர்பார்க்கப்படும் வரி வருமானம் 2,019 பில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது ஏறத்தாழ 1,523 பில்லியன் ரூபாவாகத்தான் இருக்கும் என்று கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே தமது ஆய்வு அமைப்பு பகிரங்கப்படுத்தியிருந்தமையை அது சுட்டிக்காட்டுகின் றது.**

**இப்போது அரசு இந்த ஆண்டுக்கான வரி வருமானத்தை ஒழுங்குபடுத்தி அறிவித்திருக்கின்றது. கடந்த டிசெம்பரில் இந்த அமைப்பு கணிப்பிட்ட 1,523 பில்லியன் ரூபாவுக்கு அண்ணளவாக அது 1,556 பில்லியன் ரூபா என அரசு இப்போது ஒப்புக்கொள்கின்றது.**

**அரச வருமானத்தை கடந்த ஆண்டில் வேண்டுமென்று இட்டுக்கட்டி உயர்த்திக் காட்டியமை போல, இந்த ஆண்டும் வருமானத்தை உயர்த்திக் காட்டியும், செலவினத்தைக் குறைத்துக் காட்டியும் தவறான எதிர்வு கூறுகைகள், கணிப்பீடுகளை இந்த வரவு – செலவுத் திட்டம் முன் மொழிந்து நிற்கின்றது என்ற உண்மையை இந்த ஆய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.**

**இத்தகைய வேண்டுமென்றே தவறாக முன்னிலைப் படுத்தப்படுகின்ற கணிப்பீடுகள் மூலம் துண்டு விழும் தொகையைக் குறைத்துக் காட்டி, நாடகமாடும் வேலை தாராளமாக நடக்கின்றது.**

**அரசுக்குக் கிடைக்கக் கூடிய வருமானங்கள், வெளி நாட்டு உதவித்திட்டங்கள், வெகுமதிகள் போன்றவையும் அர்த்தமற்ற முறையில் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றன என்றும் அது சுட்டுகின்றது.**

**இத்தகைய முறையில் தவறான கணிப்பீடுகளை முன் னிறுத்துதல் வரவு – செலவுத் திட்டத்தை மட்டுமல்ல நாட் டின் பொருளாதாரத்தையே பெருமளவு மோசமடையச் செய்யப் போகின்றது என அந்த அமைப்பு எச்சரித்துள் ளமை கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.**

## புத்தளம் - உடப்பு பிரதேசத்தில் தமிழ்ப் பிரதேச சபை ஒன்றினை உருவாக்குமாறு டக்ளஸிடம் கோரிக்கை



புத்தளம் - உடப்பு பிரதேசத் தில் தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற பிரதேசங்களை இணைத்து புதிய பிரதேச சபை ஒன்றை உருவாக்கித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டு பிதேச சபைத்தலைவர் தட்சணாமூர்த்தி தலைமையில் உடப்பு பிரதேச சமூக பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மாளிகாவத்தை யில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச் சில் கடந்த புதன்கிழமை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதன்போது, உடப்பை சூழவுள்ள பிர தேசத்தில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிக மான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், தமிழ் பிரதேச சபை ஒன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் உடப்பு கிராமத்துக்கு அச்சுறு தலாக விளங்கும் கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மீனவர் இறங்குதுறை ஒன்றுக்கான தேவை இருப்ப தால் அதனை அமைத்துத் தருமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்து ரையாடி தமிழ் பிரதேச சபையை உருவாக் குவதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராய்கி றேன் தெரிவித்தமையுடன், கடலரிப்பு மற் றும் இறங்குதுறை போன்ற விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரை யாடி நடவடிக்கை மேற்கொள்ளப் படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

### பிரியந்த கொலை சம்பவம்;

## வெளிநாட்டு கணக்காளர்கள் பாகிஸ்தான் செல்ல மறுப்பு

கொழும்பு, டிசெ. 10

இலங்கையரான பிரியந்த குமார திய வடன பயங்கரவாதக் கும்பலால் கொடூர மான முறையில் படுகொலை செய்யப்பட்ட மையை தொடர்ந்து வெளிநாட்டு கணக்காளர் கள் பாகிஸ்தான் செல்வதற்கு மறுப்பு தெரி வித்து வருகின்றனர்.

சர்வதேச தரத்திற்கு அமைவாக இயங்கி வரும் பாகிஸ்தான தயாரிப்பு நிறுவனங்களில் கணக்காய்வு பணிகளை மேற்கொள்வதற்கு, வெளிநாட்டு கணக்காளர்கள் அங்கு வருவ தற்கு மறுப்பு தெரிவிக்கின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானிலுள்ள சில நிறுவனங்களில், இலங்கையைச் சேர்ந்த கணக்காய்வு நிறுவ னங்களைச் சேர்ந்தவர்களே பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் இலங்கை கணக்காளர் பிரியந்த கொல்லப்பட்டமையி னால், அவர்கள் பாகிஸ்தானுக்கு செல்ல மறுப்பு தெரிவித்து வருவதாக பாகிஸ்தான் ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பாகிஸ்தான் – சியல்கொட் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளர் பிரியந்த குமார என்பவர் ஒரு கும்பலால் அடித்து, எரியூட்டப் பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த காணொலி சமூக வலைத் தளங் களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற் படுத்தியிருந்த நிலையில், இலங்கை அரச தலைவர்கள் உட்பட பலர் கண்டனம் வெளி யிட்டிருந்தனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக இது வரை பிரதான சந்தேகநபர் உட்பட நூற்றுக் கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பிரியந்த குமார படுகொலை விவகாரம்;

## பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டது சுதந்திரக் கட்சி

கொலையை நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தை கண்டிப்பதாக நாடாளு மன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக் கிழமை) உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் ஏற்கனவே கண்டித்துள்ளோம்.

இராஜதந்திர மட்டத்திலான நடவடிக்கை களும் எடுக்கப்பட்டுள்ளன. இந்த விவகாரத்தில்




பாகிஸ்தான் பிரதமர் செயற்பட்ட விதம் சிறப்பு. அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

ஆனால் கொலையை நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தைக் கண்டிக் கின்றோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## களுத்துறை - வஸ்கடுவ பிரதேசத்தில் தளபாடத் தொழிற்சாலையொன்றில் தீ

### கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது

களுத்துறை – வஸ்கடுவ பிரதேசத்தில் தளபாட தொழிற்சாலையொன்றில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

களுத்துறை நகரசபைக்கு சொந்த மான இரு தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தி, பிரதேசவாசிகளின் உதவி யுடன் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின் றது.

பலகைகளை களஞ்சியப்படுத்தும் பகு தியிலேயே இந்த தீ விபத்து இடம்பெற் றுள் ளது.

தீப் பரவலுக்கான காரணம் இதுவரை யில் அடையாளம் காணப்படவில்லை என் பதுடன் பெருந்தொகை பலகைகள் தீக்கி ரையாகியுள்ளன.

இந்த விபத்தால் ஏற்பட்ட நட்டம் இதுவ ரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னர் வரலாறு காணாத அளவு பொருளாதார நெருக்கடியில் நாடு!

## கலாநிதி ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

நாடு வரலாறு காணாத அளவிற்கு பொருளாதார நெருக்கடி நிலைமையை எதிர் நோக்கியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய ஒரே வழி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்வதேயாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேற்று மாற்று வழிகள் எதுவும் இல்லை எனவும், உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக்



கொள்வதற்கான காலம் கடந்து விட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு வேறும் எந்தவொரு மாற்று வழியும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கு இடையில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 30 வீத வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது எனவும், எதிர்வரும் ஜனவரி மாதம் இது மறைப் பெறுமதியை எட்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் இவ்வாறான ஒரு நெருக்கடி நிலைமையை இதுவரையில் சந்தித்தது கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானில் பிரியந்த கொலை குறித்து பிரதான சந்தேகநபர் வாக்குமூலமளிப்பு

பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் தொழிற்சாலை முகாமையாளராகப் பணியாற்றி வந்த 48 வயதான பிரியந்த குமார கடந்த வெள்ளிக்கிழமை அடித்துக் கொல்லப்பட்டு அவரது உடல் எரியூட்டப்பட்டது.

இந்நிலையில், குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபர்கள் அனைவருக்கும் அதிகபட்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உறுதியளித்திருந்தார்.

பாகிஸ்தானில் உள்ள ராஜ்கோட் தொழிற்சாலையின் முகாமையாளர் பிரியந்த குமாரவின் உடலுக்கு தீ வைத்ததாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கொலைக்கும்பலின் தலைவரான முகமது கலாம் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். நான் ஆள்களை ஒன்று திரட்டி முகாமையாளரின் உடலுக்கு எண்ணெய் ஊற்றி 'அல்லாஹு அக்பர்' என்று கூறி கொளுத்தினோம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளரொருவர் தடுத்தும் இந்த வாக்குமூலத்தை அவர் வழங்கினார் எனவும் தெரிவித்துள்ளார்.

# இனிவரும் காலங்களில் மின்துண்டிப்பு இருக்காது

## அமைச்சர் காமினி லொக்குகே உத்தரவாதம்

இனிவரும் காலங்களில் எந்த விதத்திலும் அவசர மின் விநியோக தடையேற்படாது எனவும் மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் மின் சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சு வெற்றியடைந்துள்ள நிலையில், மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என அவர்கள் உறுதியளித்துள்ளனர். இதனடிப்படையில், மின் விநியோகத் தடை ஏற்படாது. எவ்வாறாயினும் அண்மையில் ஏற்பட்ட திடீர் மின் விநியோக துண்டிப்பு சீர்குலைவு நடவடிக்கையா என்பதை அறிய விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தவிர யுகதனவி மின் உற்பத்தி நிலையம் சம்பந்தமாக அமெரிக்காவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளமையுடன் அமைச்சர் லொக்குகே குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் கைது





வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் முப்பது லட்சம் ரூபா மதிக்கத்தக்க அபின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவின் வழிகாட்டலில் குற்ற புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ஈ.ஏ.டபிள்யூ.எஸ்.எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்களான ஜே.பகீர்தரன், விக்ரம சேகர, எஸ். பண்டார ஆகியோர் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே அபின் போதைப் பொருளும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை அல் அக்ஷா வீதியில் சந்தேக நபரின் சகோதரியின் வீட்டைச் சுற்றி வளைத்த போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 கிராம் அபின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், ஓட்டமாவடி ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபருடன் தொடர்புடைய வியாபாரிகள் வேறு யாராவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்வதற்குப் பொலிஸாருடன் இணைந்து வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடிதங்களில் கையெழுத்திட மட்டுமேயான அமைச்சு பதவி எனக்குத் தேவையில்லை!

## சீ.பி.ரத்நாயக்க காட்டம்



அமைச்சரவையில் வழங்கும் கடிதங்களில் கையெழுத்திடவும் அல்லது நாடாளுமன்றத்தில் பதிலளிக்கவும் மாத்திரம் தனக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி தேவையில்லை என வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பணியாற்ற முடிந்தால், பணியாற்ற வேண்டும். வேலை செய்யும் போது காலைப் பிடித்து இழுக்கக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.

வரவு – செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில நேரம் மக்கள் எம்மை நிராகரிக்கலாம். எமக்கு அமைச்சுக்களை கைவிட செல்ல வேண்டுமாயின் எந்தப் பிரச்சினைகளும் இல்லை. எனினும் நான் நுவரெலியா மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும். முழு நாட்டு மக்களுக்கும் நான் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் சீ.பி. ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# புதிய அரசியல் அணி ஒன்றை உருவாக்கும் முனைப்பில் மைத்திரி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய அரசியல் அணியொன்றை உருவாக்கும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளார்.

நாட்டில் அரசியலில் ஈடுபட்டுள்ள நேர்மையான, ஊழல் மோசடிகளற்ற, நாட்டை நேசிக்கும் நபர்களை ஒன்றிணைத்து விரிவான அரசியல் சக்தியொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்தவை வருமாறு –

இவ்வாறான ஒரு சக்தியை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் நிலவும் உரப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, எரிவாயு மற்றும் பொருள்களின் விலை உயர்வு போன்ற விடயங்கள் தொடர்பாக ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தாது அரசாங்கம் தனது கடமைகளை செய்ய வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுமக்கள் இன்னமும் உரம் கிடைக்காது அவதியுறுகின்றனர். நாட்டின் பல பகுதிகளிலும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்பொழுது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்க வேண்டுமெனவும், மக்களுக்காக அரசாங்கம் தனது கடமையை செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# எரிவாயு மோசடிகள் அரசின் இயலாமை!

## சஜித் காட்டம்

எரிவாயு கொள்கலன் வெடிப்பு, எரிவாயு கலவையில் மாற்றம் உட்பட எரிவாயு மோசடிகள் அரசாங்கத்தின் இயலாமையின் பிரதிபலன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நுகர்வோரைப் பாதுகாக்க இருக்கும் நுகர்வோர் சேவை அதிகார சபை தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அரசாங்கத்தை பாதுகாக்கும் இடத்துக்குச் சென்றுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். அம்பலாங்கொடை உடபெரகம பிரதேசத்தில் அறநெறி பாடசாலை கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாட்களில் சமையல் எரிவாயுடன் சம்பந்தப்பட்ட 458 இற்கும் அதிகமான வெடிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. அவை சாதாரணமான வெடிப்புச் சம்பவங்கள் என துறைக்கு பொறுப்பான அமைச்சர் கூறுகின்றமை நகைப்புக்குரியது. நுகர்வோர் சேவைகள் அமைச்சர், நிறுவனங்களின் சேவைகள் அமைச்சராக மாறியுள்ளார். முழு அரசாங்கமும் ஒன்றாக இணைந்து நாட்டு மக்களை முட்டாளாக்கி வருகின்றது எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

# ஒமிக்ரோன் கொவிட் மாறுபாட்டிலிருந்து பாதுகாப்பைத் தரும் பூஸ்டர் தடுப்பூசிகள்

## சுகாதார நிபுணர்கள் தகவல்

பைஸர் பூஸ்டர் தடுப்பூசிகள் ஒமிக்ரோன் மாறுபாட்டிற்கு எதிராக வலுவான பாதுகாப்பை வழங்குவதாக பைஸர்–பயோஎன்டெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆய்வுகளின் தரவுகளின் படி, புதிய மாறுபாடு முந்தைய விகாரங்களைக் காட்டிலும் ஏற்கனவே உள்ள தடுப்பூசிகளால் வழங்கப்பட்ட நோயெதிர்ப்பு பாதுகாப்பைத் தவிர்ப்பதில் மிகவும் திறமையானது என்பதை உறுதிப்படுத்துகின்றது என சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில் ஆரம்ப இரண்டு டோஸ் தடுப்பூசிகள் தொற்றுநோயைத் தடுக்க போதுமானவையாக இருக்காது எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 216

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**558. நல்லாட்சி அரசில் – முக்கியமாக ரணிலில் – நம்பிக்கை வைத்தமையினால் தமிழ் மக்கள் எவற்றைப் பறிகொடுத்தார்கள்?**

முதலாவது – அவர்கள் நடத்திய ஒரு திமிரான அரசியலால் தமிழர்களது ஒற்றுமையை சிதைத்து பறி கொடுத்தார்கள். மக்களிலிருந்து விலகி நின்று, தாம் என்ன செய்கிறோம் எனத் தங்களுக்கு தெரியும் என்றும், தாங்கள் வாக்கு தந்த



அரசமைப்பில் பெரும் பகுதி தங்களது உதவியுடனே ஆக்கப்படுகிறது என்றும், ஆகவே அதனை ரணில் அரசாங்கம் விரைவில் கொண்டுவரும் என்றெல்லாம் கதைகள் அளந்து விட்டு, ஐந்து வருட காலத்தின் பின் அந்த யாப்பின் மாதிரியின் நகல் ஒன்றைக் கூட கொண்டு வந்து மக்களுக்கு காட்ட முடியாதிருந்தது. மக்களுடைய ஆதரவு தான் ஓர் அரசியல் கட்சியின் பலம் .இவற்றால் 16 அங்கத்தினர்களை கொண்டிருந்த கூட்டமைப்பு 10 அங்கத்தவர்களாக குறைந்தது 516,000 வாக்குகளிலிருந்து 327,000க்கு விழுந்தது. தமிழர் தேசியப் பரப்பிலேயே அவர்களிலிருந்து வெளியேறியோரும் புதியவர்களும் பல கட்சிகள் ஆரம்பித்தார்கள். அவர்கள் எல்லோரையுமே இப்பொழுது ஒரு தரப்பில் ஒத்துப் போகச்செய்வது சிரமமான காரியமாக ஆகியிருக்கின்றது. சம்பந்தர் கொழும்பை மையப்படுத்தி அரசியல் செய்தவர். ஆனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கியவை, அனுபவப்பட்டவைகள் பற்றி நன்றாக விளங்கியவர். சுமந்திரன் யாழ்ப்பாண பின்னணியைக் கொண்டாலும் கொழும்பிலேயே வளர்ந்தவர். அரசியல் அனுபவம் குறைந்தவர். நம்பிக்கையின் அடிப்படைகளில் காரியங்கள் ஆற்றிக்கொள்ளலாம் என்று எண்ணியவர். தமிழர் பிரச்சினைகளைக் கொழும்பை மையப்படுத்தியே பார்க்கிறார். நான் தவறாக இருக்கலாம். ஆனால் நடைமுறைகளில் இது எனது புரிந்துணர்வு. இவற்றின் கூட்டோ அல்லது எதுவோ மேலாண்மைச் சிங்கள அரசியல் கட்சிகளில் மிகவும் மோசமான இனவாதக் கட்சியை அடையாளம் காண விரும்பாது, "நல்லாட்சி" தரும் என நம்பி முட்டுக்கொடுத்தார்கள். இந்திய மக்களின் குடியுரிமையை 1948லேயே பறித்தது, பயங்கரவாதச் சட்டத்தை அமுல்படுத்தியது, யாழ்ப்பாண பொது நூலகத்தை எரித்தது, 1983 கலவரத்தை ஒழுங்குபடுத்தித் தூபமிட்டது, இந்திய ஒப்பந்தத்தை நிர்ப்பந்தத்தில் ஏற்றுப் பின்னர் சீரழிக்கும் கட்டமைப்புகளை ஏற்படுத்தியது போன்ற பலவற்றின் பிதாமகர்கள் இவர்கள்தான் என்பதை அறிந்திருந்தும் அமெரிக்கா முன்னெடுத்த அரசாங்க மாற்றத்துக்கு துணைபோய், ராஜபக்ஷக்களுக்கு அழுத்தம் தந்து, 13க்கும் மேலாக தருவோம் என்பதை நடைமுறைப்படுத்த சர்வதேச சத்தை நாடவில்லை.

13 ஆம் சரத்திலும் பார்க்க மேலதிக அதிகாரங்களுடன், ஒற்றுமையான, பிரிக்கப்படாத, பிரிக்க முடியாததான நாட்டிற்குள் அதிகாரப்பரவல் வருவதை குழப்பாமல் இருப்பதற்காக, தமிழ் மக்களின் அரசாங்கத்திற்கெதிரான போராட்டங்களை முன்னெடுக்க ஊக்குவிக்கவில்லை. மீறி அதைச் செய்தவர்களையும் கண்டித்தார்கள். சிங்கள மக்களை ஜனாதிபதியே முன்னின்று குடியேற்றுவதையும், இராணுவம் மக்களின் அன்றாட வாழ்க்கைகளில் ஊடுருவுவதையும், காணிகள் பௌத்த பீடங்களால் அபகரிக்கப்படுவதையும் பற்றி எதிர்ப்பே தெரிவிக்கவில்லை ஏனெனில் புதிய அரசமைப்புச் சட்டத்தைப் பெற்று விட வேண்டும் என்பதற்காக இந்த நல்லாட்சிக் காலத்தில் நாசூக்காகக் கட்டமைக்கப்பட்டு, தமிழ் மக்கள் பறிகொடுக்க வைத்தவையே இன்று கோட்டா அரசுக்கு மூலதனமாக சர்வதேசத்தில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டவை என கைக்கொடுக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அன்றிலிருந்து இன்று வரை நல்லாட்சி காலத்திலும் "காணாமல் போனவர்களுக்காக" போராட்டம் நடத்துகிறது. கூட்டமைப்பு இதை காணாத தல்ல, அறியாதது அல்ல. நல்லாட்சிக் காலத்தில் காணாமல் போனவர்களை பற்றிய வைக்கு காரியாலயம் ஏற்படுத்தினார்கள்.



அதற்கு 'காணாமலாக்கப்பட்டோர் காரியாலயம்' (The Office of Missing Persons) என பெயரிடாமல் "காணாமல் போனோர்" காரியாலயம் எனவே ரணிலின் நல்லாட்சி அரசு பெயர் வைத்தது. சம்பந்தனும் சுமந்திரனும் சமஷ்டி என்ற பெயரல்ல முக்கியம், அதிகாரங்களே முக்கியம் என்று விளக்கம் தந்த மாதிரி, இதற்கும் பெயரல்ல, செய்யப்போகும் பணிதான் முக்கியம் என்று அதனை ஏற்றார்கள். காணாமலாக்கப்பட்டோர், காணாமல் போனோர் பற்றிய தகவல்களை கூட அது அறியவில்லை. பெயர்ப் பலகையும் காணாமல் போனது. பின் மீண்டும் ஏறியது. அதுதான் நடந்தது.

நல்லாட்சி காலத்தில் ஸ்ரீலங்கா அரசு மனித உரிமை மன்றில் அது நிறைவேற்றிய தீர்மானத்தை இணைந்து ஆக்கியது எனப் பெருமளவாக பேசப்பட்டது. ஆனாலும் இன்று கோட்டபாய அரசு அவர்கள் 'காணாமலாக்கப்பட்டவர்கள் அல்லர்',



'காணாமல் போனவர்கள்' எனக் கூட்டமைப்பினரே ஏற்று 'காணாமல் போனவர்கள் காரியாலயத்தை' அமைத்தார்கள், ஆகவே அவர்களை இவ்வளவு காலத்தின் பின் கண்டுபிடிக்க இயலாது, பலர் வெளிநாடுகளுக்குப் படகுகள் மூலம் தப்பி வேறு பெயர்களில் வாழலாம், ஆனால் அவர்களுக்கு மரணசாதனமும், இழப்பீடும் தந்து உதவுவேன் என சர்வதேசத்துக்கு பரிகாரம் தருகிறார்.

சிங்கள அரசியல் தலைமைகளின் சாணக்கியத்தையும், ஒற்றுமையையும் கணக்கெடுக்காமல் பழையபடி வழமையாக அரசாங்க மாற்றங்களால் தம் காரிய மாற்றும் அமெரிக்காவோடு அழைத்தோ, அழைப்பை ஏற்படுத்தியோ பேசினார்கள் என்பதல்ல முக்கியம். அவை தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை, உரிமைகளை ஆணித்தரமாக்குகிறதா என்பதுதான் முக்கியம். நல்லாட்சியில் தொடங்கிய புதிய அரசியல் யாப்பு, காணாமலாக்கப்பட்டோர், காணாமல் போனோர் அமைப்பில் அடங்கிய மாதிரி முடியாமல் இருப்பது முக்கியம்.

**559.இனப்பிரச்சினைக்கு அமெரிக்காவிடமிருந்து தீர்வாக வரக்கூடிய யோசனைத் திட்டத்தை எதிர்பார்த்து அதைப் பார்த்தபின் பேசலாம் என இந்தியாவின் அழைப்பு பிற்போடப்பட்டது என செய்திகள் இப்போது தெரிவிக்கின்றனவே?**

அலுவலகத்திற்கு திடீர் லீவுக்கு காரணம் ஒன்று சொல்லிப் பின் ஒன்று விளக்கத்திற்கு சொல்லி, அதை ஆதாரப்படுத்தி வைத்தியர் சான்றும் கொடுத்து பின், காதலியுடன் பீச்சிலிருந்து சுண்டல் சாப்பிட்டு தெரியவந்தால் நம்பகத்தன்மை எப்படி வளரும்? அதற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லை.

தனி மனித, சர்வதேச உறவுகள் எவையானாலும் நம்பகத் தன்மைகளில் தான் எல்லாம் முன்னேறுகின்றன. அப்படியான உறவு கூட்டணிக் காலத்திலிருந்து அமிர்தலிங்கம், இந்திராகாந்தி, ராஜீவ் காந்தியிடையே வளர்ந்தது. அந்த உறவுகளில் இப்படியான காரணங்கள் புரிந்துணர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம்.



அப்படியான உறவை கூட்டமைப்பு போரின் பின்னாலும் நல்லாட்சிக் காலத்திலும் இந்தியாவுடன் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. சிங்களப் பெரும்பான்மையுடனான உறவில் புதிய அரசமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம், அதில் மற்றவர்கள் ஈடுபாடு தேவையில்லை என்ற மனோபாவம் முன்னின்றது.

அதேபோல அமெரிக்க விஜயத்தின் பின் தங்களை உடனடியாகக் கூப்பிடுவதால் சில சமயம் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதுடன் இனப்பிரச்சினையை வெட்டிவிடலாம் என சந்தேகப்படுவதாகவும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. அமெரிக்காவிடமிருந்து 13 ஆம் திருத்தத்துக்கு மேல் போய் தீர்வு கோரியிருப்பதால் அதைப்பார்த்து செய்யலாம் என்ற நோக்கமும் சொல்லப்படுகிறது. இதில் இந்தியாவுடன் இணைந்து அமெரிக்காவை அணுகுவதா அல்லது அமெரிக்கா மூலம் இந்தியாவை அணுகுவதா என்ற சர்வதேச கள யதார்த்தம் தமிழ்



மக்களுக்கு எழுகின்றது.

இது தமிழ் மக்களின் எதிர்காலங்களைத் தீர்மானிக்கும் விவகாரம். இங்கு தனி மனிதர்கள் மட்டும் தீர்மானங்கள் எடுப்பது இதுவரை நடத்தப்பட்ட அரசியலின் சாயல்களையே வெளிப்படுத்துகின்றது. இவை எல்லா அரசியல் பிரதிநிதிகளும் பொது அமைப்புகளின் தலைவர்களும் கூட்டாகப் பேசி முடிவெடுக்க வேண்டியது.

கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சந்திப்புக்குப் போய் இந்தியாவின் நிலைப்பாடு எதுவெனத் தெரிந்து, அங்கிருந்து திரும்பி, மற்றத் தரப்புகளோடு ஆராய்ந்து தெரிவிப்பதாகக் கூறி வந்திருக்கலாம். அப்படி 13ஆம் சரத்தை அமுல்படுத்தி, அத்தோடு காய் வெட்டுவது என்ற நினைப்பு இந்தியத் தூதுவருடனான பல சந்திப்புக்களில் கூட்டமைப்புக்குப் புரிந்திருந்தால், தாங்கள் அமெரிக்காவுக்கு முன்வைத்த சமர்ப்பணங்களைச் சொல்லி அதைப் பார்க்க விரும்புகிறோம் என விளக்கப்படுத்தியிருக்கலாம். கல்யாணம், பின் வருத்தம் போன்ற சிறுபிள்ளைத்தனமான தந்திரங்கள், நரி காக்காவிடம் வடைக்குச் சொன்ன கதையையும், ஏமாந்த காக்காக்களும் உண்டு. வடையாகப் பறந்து சென்ற காக்காக்களும் உண்டு.

(வளரும் .....)

# ஆட்சிக் கவிழ்ப்போ, கைப்பற்றலோ கூட்டமைப்பின் நோக்கம் கிடையாது

## இரா.சாணக்கியன் திட்டவட்டம்



அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமென்றோ, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றோ ஒருபோதும் நினைக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

ஒரேநாடு – ஒரே சட்டம் என்பதன் ஊடாக இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் தலைதூக்கியுள்ளது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிழக்கு மக்கள் அனைவரும் இந்த செயலணிக்கு எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்கள். ஒரே நாடு – ஒரே சட்டம்என்பதை வைத்து நாட்டை ஒருபோதும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமென்றோ, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றோ ஒருபோதும் நினைக்கவில்லை. மாறாக பொருளாதாரத்தை வளர்க்கவும் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இணைந்து செயற்படத் தயார் என்பதையே கூற விரும்புகிறோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அட்டாளைச்சேனை பிரதேசசபை வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து





(பாறுக் ஷிஹான்)

வீதியில் பயணம் செய்த அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை மீறி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அம்பாறைமாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரிப்பத்தான்சேனை வீதியினூடாகப்பயணம் செய்த நிலையில் வேகக் கட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியாமல் பிக்கப் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தின் போது வாகனத்தில் பயணம் செய்திருந்தனர் எனக் கூறப்படும் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் உட்பட இருவர் காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் வாகனம் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இரு வேறு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கொண்டதில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பில் சவால்களுக்கும் மத்தியில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, டிசெ. 10

முல்லைத்தீவு மாவட்டமெங்கும் கட்டாக்காலி கால்நடைகள் அதிகரித்துள்ளன எனவும் இதனால் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனவும் மக்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் நிலையில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகள் 75 பிரதேச சபையால் பிடிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, இவ்வாறான கட்டாக்காலி கால் நடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் பிரதேச சபை ஊழியர்கள் தாக்கப்படுகின்றமையும் அச்சுறுத்தப்படுகின்றமையும் தொடர்வதாகவும் கால்நடை வளர்ப்போரும் பொதுமக்களும் குறித்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பிரதேச சபையினர் கோருகின்றனர்.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் கடந்த திங்கட்கிழமை வீதிகளில் கட்டாக்காலிகளாக நின்ற 75 கால்நடைகளை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் பிடித்து பிரதேச சபையில் கட்டிவைத்துள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வீதிகளில் நிற்கும் கட்டாக்காலி கால்நடைகளால் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமையுடன் விவசாய செய்கைக்கும் கால்நடைகள் பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளன. இந்நிலையில் வீதிகளில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை 75 மாடுகளை பிரதேச சபையினர் பிடித்துள்ளார்கள்.

### பிரதேசசபை ஊழியர்கள் மீது தாக்குதல் இருவர் பொலிஸாரினால் கைதாகினர்



இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு கால்நடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து தண்டம் அறவிடப்படும் என்றும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளார்கள். பெரிய மாடு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும், சின்ன மாடு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவும் ஒரு நாள் பராமரிப்பு இருநூறு ரூபாவும் என அறிவித்துள்ளதுடன். கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும் பிரதேசசபையினர் அறிவித்துள்ளார்கள்.

இதேவேளை முள்ளியவளை பிரதேச சபையின் சுகாதார ஊழியர்கள் சுகாதார பணிசெய்து கொண்டிருந்த போது நான்கு பேர் கொண்ட குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய முன்பக்க வீதியை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் முள்ளியவளை பிரதேச சபையின் உப அலுவலக சுகாதார ஊழியர்கள் ஈடுபட்டிருந்த வேளை இரண்டு மோட்டார் சைக்கிளில் நான்கு பேர் கொண்ட கும்பல் நீங்கள் தானே மாடு பிடிக்கிறீர்கள் எனத் தெரிவித்து பிரதேச சபை ஊழியர்கள்மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்தச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பிரதேச சபையின் ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியமை, பணிக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அச்சுறுத்தியமை தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் பிரதேச சபையால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதற்கு அமைய இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் தாம் மேற்கொள்ளும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு பண்ணையாளர்களும் பொதுமக்களும் ஒத்துழைக்குமாறு பிரதேசசபை தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## உடற்பிடிப்பு நிலையங்களை ஒழுங்குறுத்த புதிய சட்டம்

உடற்பிடிப்பு நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்காக விரைவில் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் எம்.டீ.ஜே. அபேகுணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போது உடற்பிடிப்பு நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்கு உரிய நிறுவனமொன்று இல்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கழிவுப் பொருள்கள் வீசப்படும் 1,500 இடங்கள் அடையாளம்!



*களனி கங்கையில் கழிவுப் பொருள்கள் வீசப்படும் ஆயிரத்து 500 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.*

*சுற்றாடல் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அவ்வாறான இடங்களை கடற்படையின் உதவியுடன், சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று(வியாழக்கிழமை) கண்காணித்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*'ஆறுகளை பாதுகாப்போம்' திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் களனி கங்கையின் பாதுகாப்பிற்கு முன்னுரிமையளிக்கவும் குறிப்பிடப்படுகின்றது.*

# ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி பெண்கள் அமைப்பால் கவனவீர்ப்பு!

## மட்டக்களப்பில் நடந்தது



சிறுபான்மையினருக்கெதிராக பிரயோகிக்கப்படும் ஆயுதமாகவுள்ள இந்த பயங்கரவாத தடைச்சட்டம் கட்டாயமாக நீக்கப்படுவதுடன் இந்தச் சட்டம் பாவிக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் போன்ற ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி மட்டக்களப்பில் பெண்கள் அமைப்பால் கவனவீர்ப்பு பேரணியொன்று நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பெண்கள் ஒன்றிணைக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டது.

கல்லடி பாலத்திலிருந்து அமைதியான முறையில் பறை மேளம் முழங்க குறித்த பேரணி மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையம் வரையில் வருகைதந்ததுடன் அங்கு தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் அரசாங்கத்துக்கான மகஜர் வாசிக்கப்பட்டது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் செயல்வாத வாரம் கடந்த நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையில் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. அதனை முன்னிட்டே இந்தப் பேரணி நடாத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் 'வன்முறைகளற்ற வீடும், நாடும் எமக்கு வேண்டும், பெண்களுக்கு பாரபட்சமான சட்டத்தைத் திருத்தவேண்டும், நீதிகோரும் சகோதரிகளாக நாம் ஒன்றிணைவோம், வன்முறைகளற்ற ஒரு கௌரவமான சமூகத்தை உருவாக்க ஒன்றிணைவோம், பசியும் வன்முறைகளுமின்றி தன்னிறைவாக வாழ்வோம்' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் பேரணியில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

தமிழ் - முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்டவர்கள் சுகாதார நடைமுறைகளைப்பேணியவாறு இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இதன்போது இந்த வருடம் பெரும் தொற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளும் தற்கால நெருக்கடியான சமூக மற்றும் அரசியல் சூழல் காரணமாக பெண்கள், சிறுமிகள் உட்பட அனைவரும் பாரியளவில் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள் நாட்டின் பாரிய பிரச்சினையாகவுள்ளதுடன் இந்த வன்முறைகள் தொற்றுநோய்ச் சூழலால் மறைக்கப்படுகின்றன. இலங்கையில் ஐந்துக்கு ஒரு பெண் என்ற வகையில் தினமும் உடல் ரீதியான, பாலியல் வன்முறைகளுக்குள்ளாகின்றனர் என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் கூறியுள்ளது. இத்துடன் தற்போது பெண்களுக்கு பாரபட்சமாகவுள்ள சட்டங்களான பொதுத்திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் ஆகியன உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்.

பசி என்பது எங்கள் அனைவரிடமும் காணப்படும் ஒன்று. நாம் ஒரு வேளையாவது உண்டு பிழைத்துக் கொண்டு வருகின்றோம். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பது எமக்கு மறைமுகமாக ஏற்படுத்தப்பட்ட வன்முறையேயாகும். பசியும் வன்முறையே! பசி என்பது எமது உடல் ஆரோக்கியத்துக்கும் மனதுக்கும் ஏற்படுத்தப்படும் வன்முறையேயாகும். பசி என்பது உணவு பற்றாக்குறையால் அல்ல! இது ஓர் அரசியல் ரீதியான அடக்குமுறையாகும். மிக நலிவடைந்த ஏழை மக்களுக்கு உதவுவதற்கு எவ்விதமான அரசியல் விருப்பங்களும் இல்லாததால் நாம் பட்டினியில் இருக்கிறோம்.

இது மட்டுமல்லாது இந்த வருடம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் (நாங்கள்) எமது பிரதேசங்களில் இருக்கும் பலர் கைது செய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டு நீதியான விசாரணைகளின்றி சிறைகளில் வாடுகின்றார்கள். இதனால் நாங்கள் தொடந்தும் பல சிரமங்களுக்குள்ளாகிக் கொண்டுள்ளோம்.

அத்துடன் தகுந்த நடவடிக்கைகள் இல்லாமை மற்றும் முடிவில்லா தாமதங்களால் இந்தச் சட்டத்தின் கீழ் எமது அன்புக்குரியவர்கள் (கைது) தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் பெண்களாகிய நாங்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளோம்.

சிறுபான்மையினருக்கெதிராக பிரயோகிக்கப்படும் ஆயுதமாகவுள்ள இந்த பயங்கரவாத தடைச்சட்டம் கட்டாயமாக நீக்கப்படுவதுடன் இந்தச் சட்டம் பாவிக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இவை அனைத்தையும் அடையாளப்படுத்துவதற்கான அரசியல் விருப்பம் எங்கே? வன்முறைகளுக்கான பதிலிறுப்பாக அத்தியாவசிய சேவைகள் எங்கே? என நாம் அரசிடமும் அரசியல்வாதிகளிடமும் கேள்வியெழுப்புகின்றோம்.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிரான சேவைகள் அனைத்தும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும், உணவுப்பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதுடன் உணவு விநியோகத்தையும் இலகுபடுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், பசி பட்டினியில் இருந்து மக்களை விடுவிக்க சமூகப்பாதுகாப்பு செயற்றிட்டங்களை அரசு உடனடியான அமுல்படுத்த வேண்டும்.

அரசியல்மயப்படுத்தப்படாத, உள்ளூர் வளப் பொருளாதார முறைமையை பிரதானமாக்கும் நடைமுறைக் கொள்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பாவித்து கைது செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிள்ளைகளுக்கு பிரதமரின் தலைமையில் புலமைப் பரிசில்



கொழும்பு, டிசெ. 10

2020 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களின் பிள்ளைகள் 9 ஆயிரம் பேருக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் முதலாம் கட்ட காசோலை வழங்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) அலரி மாளிகையில் இடம்பெற்றது.

முதலாவது கட்டத்தின் கீழ் 6 ஆயிரம் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கைத் திறப்பதற்கான 89, 820, 000 ரூபா பெறுமதியான காசோலை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் தலைவர் ஸ்ரீயான் டி சில்வா விஜயரத்னவால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடம் வழங்கிவைக்கப்பட்டது.

பிரதமர் குறித்த காசோலையை அந்தச் சந்தர்ப்பத்திலேயே மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ விடம் கையளித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களின் 9 ஆயிரம் பிள்ளைகளுக்கு ஒருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

1994ஆம் ஆண்டு தொழில் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக் கருவிற்கமைய இந்த புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய அன்று முதல் இன்று வரை தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசத்தின் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும், தொழிலாளர் பெருமக்களுக்காகவும் முன்னெடுக்கப்படும் ஓர் உன்னத பணியாக இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகிறது.

புலமைப்பரிசில் பெறும் பிள்ளைகளுக்காக குறித்த நிதி மக்கள் வங்கியின் சிசு உதான வங்கிக் கணக்கில் வைப்பிலிடும் போது மலளசேகல சிங்கள - ஆங்கில அகராதி பரிசளிக்கப்படுவதுடன், சாதாரணமாக சிசு உதான வங்கிக் கணக்கிற்கு வழங்கப்படும் வட்டி வீதத்திற்கும் அதிகமான வட்டி இந்தக் கணக்கிற்கு வழங்கப்படும்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தலைவர் ஸ்ரீ யான் டி சில்வா விஜயரத்ன, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை பொது முகாமையாளர் டி.பீ.ஜீ.பெர்னாண்டோ, மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் எம்.ஜீ.ஏ.சமன் குமார உள்ளிட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை மற்றும் மக்கள் வங்கி அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் நேற்று (வியாழக்கிழமை) முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு வார ஆரம்ப நிகழ்வு ஆரம்பமானது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்,அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் உள்ளடங்களாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பனங்கட்டிக்கொட்டு மற்றும் சின்னக்கடை பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு மேற்படி குழுவினர் சென்று டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மேலும் பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றங்கள், பாதுகாப்புத் துறையினர், சுகாதார திணைக்களம் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் இணைந்து சிரமதான முறையிலும், குறிப்பாக டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பனங்கட்டுகொட்டு, எமில் நகர், பெரிய கடை,பேசாலை 5,8 ஆம் வட்டாரம், தோட்டவெளி போன்ற கிராமங்கள் உயர் ஆபத்துள்ள இடங்களாக சுகாதாரத் துறையினர் அடையாளப்படுத்தி உள்ளனர்.

குறித்த இடங்களில் எதிர்வரும் ஒரு வாரங்களுக்கு சிரமதானம் மேற்கொள்ளப்பட உள்ளதோடு, அப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு விசேட குழுவினர் சென்று வீடுகள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு டெங்கு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## பிறவிப் பயன்



இன்று உலகில் அநேக மானோர் வீணான ஆசைகளை வளர்த்து, அமைதியை இழந்து, விரக்தியுடன் காலத்தைக் கழிக்கின்றனர். இருக்குமிடத்தை விட்டு இல்லாத இடம் தேடி அலைகின்றனர். இதிலிருந்து விடுபட சிறந்த வழி மூதாதையர் ஆசி யும், குலதெய்வ வழிபாடும், குருவின் வழி நடத்தலுமே ஆகும்.

மூதாதையர்களது தியாகங்களே எம்மை வாழ வைப்பவை போல எம் சந்ததி வாழவும் வளரவும் உதவி நிற்கின்றன. ஆகவே எமது மூதாதையர் கடமைகளை நாம் நிறைவாக ஆற்ற வேண்டும். அவர்கள் மறைந்தாலும் அவர்களுக் குரிய கடமைகளைக் குறைவின்றிச் செய்தல் வேண்டும். குலதெய்வம் - எம் குலத்தால் சந்ததி சந்ததியாகப் பூசிக்கப் படும் காவல் தெய்வமாகும். எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் அந்தச் சொரூபத்தை நாம் பராமரித்துக் கொள்ளல் வேண்டும். காலச் சூழலால் சில கவனிப்பாரற்று பாழடைகின்றன. அப்படி விடுதல் நல்லதன்று. அவற்றில் அதிகூடிய கவனம் செலுத்தி, அவற்றைப் பராமரித்துக் கொள்ளல் வேண்டும்.

நாம் மும்மலங்களாலும் கட்டுண்டுள்ளோம். குரு அருளால் மட்டுமே இவற்றிலிருந்து எம்மால் விடுபடமுடியும். தகுதியான குரு ஒருவரை வழிகாட்டியாக வணங்கி, ஏற்கும் பக்குவம் இருந்தால் மட்டுமே குரு அருள் சித்திக்கும். குருவின் உபதேசங்களை செவி மடுத்து, அவற்றை உள்வாங்கி, அதன்படி நடத்தல் சிறப்புடைத்து. இவற்றால் எமது பிறவிப்பயனை அடையலாம்.

**-சு.சண்முகராசா -**
**(முன்னாள் யாழ் இந்து ஆசிரியர், கனடா)**

## நல்லை கந்தன் கழற்கோர் கவிமாலை



**தானதன தான தன்ன தானதன தான தன்ன**
**தானதன தான தன்ன - தனதான**

**தொண்டுசெயு மன்பர்நிதம் விண்டுபுகழ் கண்டுஇரு**
**வண்ணமதி ரங்கியருள் - கின்றவேலா**
**திண்ணமென நண்ணுமுயிர் கண்ணதெனு முன்னடியில்**
**திண்மையொடி லங்குவரந் - தந்துஆழ்வோய்**
**அண்டவம ரும்நிதமும் தெண்டனிடு நண்ணடியை**
**அண்டிவெகு அன்பொடுவ - ணங்கிநாளும்**
**அண்டனுன பொன்னடியில் பண்ணொடிசை தந்திடுவர்**
**அண்மையிலி லங்கிவர - செஞ்செவியில்**
**பண்படுரை நன்கறிய - தந்தவேலா**
**பண்டைவினை கொண்டுபுவி வெந்துவிழ லின்றியடி**
**பண்பதொடு நண்ணவழி- தந்திடையா**
**வண்டதனை விஞ்சுவிழி கொண்டவிரு வஞ்சியரை**
**வண்கையொடி சைந்துமணம் - கொண்டவேலா**
**வண்டிரையு தண்பொழில்கள் கொண்டஎழில் நல்லையது**
**வண்ணமுற நின்றருளு - கந்தவேளே!**

**- கவிஞர் குகதாசன் -**

## பரிவிருத்த திரிகோணாசனம்

வாரம் ஓர் ஆசனம்



**செய்(படி)முறைகள்:**

1. முதுகை நிமிர்த்தி நேராக நிற்கவும். (தடாசனம்)

2. வலக்காலை இடது காலிலிருந்து ஒரு மீற்றர் தூரம் வரை அகலமாக வைக்கவும்.

3. கைகள் இரண்டையும் மூச்சை இழுத்தவாறு பக்கவாட்டுக்கு கிடை மட்டத்திற்கு சமமாக உயர்த்தவும். உயர்த்துகையில் உள்ளங்கைகள் தரையை நோக்கியதாக இருக்க வேண்டும்.

4. கால்களை அசைக்காது இடுப்பை மாத்திரம் இடப்புறமாக 90 பாகைக்குத் திருப்பவும்.

5. மூச்சை வெளிவிட்டவாறுஇடுப்பைமுன்நோக்கி வளைத்து, வலது கையை இடதுகால் பெருவிரலில் ஊன்றியவாறு உயர்த்தப் பட்ட இடது கைவிரல்களின் நுனிப் பகுதியில் பார்வையைத் திருப்பவும். இந்த நிலையில் சாதாரணமாகச் சுவாசிக்க வேண்டும். – உச்ச நிலை

6. மெதுவாக மூச்சை இழுத்துக் கொண்டு மேலெழும்பி உடம்பு வலப்புறம் நோக்கியிருக்க இரு கைகளையும் தோள் மட்டத்திற்கு இணையாக நீட்டியிருக்க வேண்டும்.

7. பின்னர் உடம்பை முன்னோக்கித் திருப்பவும். பின்னர் மூச்சை வெளிவிட்டவாறு கைகளைக் கீழே விடவும்.

8. வலக்காலைத் தூக்கி இடக்காலின் அருகில் வைத்தவாறு ஆரம்ப நிலைக்கு வரவும்.

குறிப்பு : இதே போல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமாகவும் (இடக்கால்) செய்தல் வேண்டும். ஒவ்வொரு பக்கமும் தலா மூன்று தடவைகள் செய்தல் வேண்டும்.

**பலன்கள் :**

திரிகோணாசனம் செய்யும் போது கிடைக்கும் அதே பலன்கள் இவ்வாசனம் செய்வதால் கிடைக்கும். முதுகுத் தண்டு வடம் முறுக்கேறி வலிமை பெறும். முன்னாண் நரம்புகள் தூண்டப்பட்டு செயலூக்கம் பெறுகின்றன. வயிற்றுப்பகுதியிலுள்ள உள்ளுறுப்புக்கள் அழுத்தப்பட்டு ஊக்கமளிக்கப்படுகின்றது. இடுப்புப் பகுதிகளிலுள்ள தேவையற்ற கொழுப்புக்கள் மற்றும் ஊளைச்சதைகள் கரைக்கப்பட்டு உடல் சீரான அமைப்பைப் பெறும். இடுப்பு மூட்டுக்கள் வலிமையடையும். பெரும்பாலான வயிற்றுக் கோளாறு களுக்கு நல்லது. உடலுக்கு தேவை யான சக்திச் சம நிலை கிடைக்கும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

## ஒழுக்கம்

‘ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’ என்கிறார் திருவள்ளுவர்.

ஒரு மனிதனது வாழ்க்கையில் ஒழுக்கம் அவனது உயர்விற்கு காரணமாக அமைகின்றது. ஒழுக்கம் என்பது உரிய முறையில் நடந்து கொள்வது, தன்னுடைய பொதுநலன் அல்லது தான் சார்ந்து வாழும் சுற்றத்தாருடைய பொதுநலன் மற்றும் ஒற்றுமையைக் கருத்தில்கொண்டுதனிமனிதனானவன்கடைப்பிடித்துக் கொள்ளும் நெறியைக் குறிக்கின்றது.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். ஓம்புதல் என்றால் பாதுகாத்தல். உயிரினும் ஓம்பப்படும் என்று கூறியதால் உயிரைவிட கவனமாக அல்லது மேலானதாகக் கூறப்படுகின்றது. ஒழுக்கம் தவறியவர்கள் வாழ்வில் உயர முடியாது. அவற்றுக்கு மாறாகத் துன்பங்களையே சந்திக்க நேரிடும்.இதனைக் கல்வியே நமக்குப்போதிக் கின்றது.

அதாவது ஒழுக்கம் தராத கல்வியும் விளைச்சலைத் தராத வயலும் வீணானவை என்று நம்முன்னோர்கள் கூறுவார்கள். மனிதனாகப் பிறந்தவர்கள் எல்லோரும் உயர்வாக மதிக்கப்படுவதில்லை. அவர்களில் அற ஒழுக்கம் உடையவர்களே உயர்ந்தவர்கள் என மக்களால் மதிக்கப்படுகின்றனர். ஒழுக்கம் உள்ள ஒருவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகின்றது. அவன்தான் வாழ்வில் மென்மேலும் உயர்கின்றான். ஒழுக்கத்தின்படி நடந்தவர்களை நாடு போற்றத் தவறுவதில்லை. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நேர்மையான வழியில் கடினமாக உழைத்து வாழ்வில் முன்னேறி ஒரு செருப்புத்தைக்கும் தொழிலாளியின் மகனாக திகழ்ந்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயரக் காரணம் அவரது கடின உழைப்பும் ஒழுக்க மும்தான்.

மேலும் அற ஒழுக்கம் என்றால் என்ன என்று நாம் வரையறுத்துக் கூறமுடியாது. நம்இலக்கியங்களில் பெரியோர்களால் நல்ல செயல்கள் எது எதுவென்று கூறப்பட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் ஒழுக்கம் என்று கருதிட வேண்டும். மனம், மொழி, மெய்களைத் தீய நெறியில் செல்லவிடாமல் தடுத்து, நன்நெறியில் நிறுத்த நம் இலக்கியங்கள் துணைபுரிகின்றன. தூய்மையான பழக்கவழக்கங்கள், எண்ணம், செயல், பொய்செல்லாதிருத்தல், திருடாதிருத்தல், பிறருக்குத் தீங்கு செய்யாதிருத்தல், இன்னா சொற்களை சொல்லாதிருத்தல் பிறரிடத்தில் அன்பும் அருளும் கொண்டிருத்தல் - இவைபோல வேறு என்ன செயல்கள் உண்டோ அவையாவற்றையும் நாம் செய்யப் பழகுவதே ஒழுக்கம் என்று கூறலாம்.

நமது வாழ்வில் புயல்போல எழும் மன சஞ்சலங்களை எவரெல்லாம் அடக்கியாள கற்றுக்கொள்கிறார்களோ அவர்களே பின்னாளில் சிறந்த மனிதர்களாக மாறுவார்கள். அதனால்தான் தனிமனித ஒழுக்கம் என்பது மனிதர்களுக்கு அவசியமெனப் பேசப்படுகின்றது. மனிதன் படித்த பாடத்தை மறந்துவிட்டால் மீண்டும் படித்து அறிவைப்பெற முடியும்.ஆனால் ஒழுக்கத்தை தவறவிட்டால் அவனது குடிப்பிறப்பு எவ்வளவு உயர்ந்ததாகினும் அதன் பெருமை மங்கிவிடும். ஆகவே நாமும் தீய வழியில் செல்லாது நம்மைச்சுற்றியிருப்வர்களிற்கும் நல்லொழுக்கத்தை கூறி வழிப்படுத்துதல் சாலச்சிறந்ததாகும். கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது. ஒழுக்கமும் பண்பாடும் வளர்ந்தால் தான் வாழ்க்கை முழுமையாக நிறைவு பெறும்




**- எஸ்.அக்ஷயன் -**
**(தரம்-8, யாழ் இந்துக் கல்லூரி)**

காலைக்கதிர் Kalaikkathir

# சபாநாயகர் மௌனம் காத்தால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்

## எதிரணி பிரதம கொறடா பகிரங்க எச்சரிக்கை



சபாநாயகரே, இந்த சபைக்குள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் நாம் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்.

-இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பு விடுத்த பின்னர் அது தொடர்பில் கருத்து வெளியிட்ட லக்ஷமன் கிரியெல்ல எம்.பி. கூறியதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியமைக்கு நன்றி. குழு நியமனம் பற்றியும் குறிப்பிட்டீர்கள். அந்தக் குழு நியமனத்தின் எதிர்பார்ப்பு குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. இருந்தாலும் சரியான திசையில் செல்லும் என நம்புகின்றோம்.

நாடாளுமன்றத்தில் இரு நாள்களில் (டிசம்பர் 03, 04) நடந்த சம்பவங்களுள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். ஏனெனில் நீங்கள்தான் சாட்சியாளர். சபாபீடத்தில் இருந்து அவதானித்தீர்கள்.

எனினும், நேரில் கண்ட சம்பவங்கள் பற்றி நீங்கள் கட்சித் தலைவர்கள்கூட்டத்தின்போதும் எதுவும் அறிவிக்கவில்லை.

நாடாளுமன்ற சிறப்புரிமை சட்டத்தின் பிரகாரம், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சபைக்குள்ளோ அல்லது தெரிவுக்குழுவிலோ தாக்குதல், திட்டமிட்ட அடிப்படையிலான இடையூறுகள் மற்றும் அவமதிப்பு இடம்பெற்றால் அவை உயர்நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றங்களாகும்.

பிரச்சினையை நாடாளுமன்றத்துக்கு வெளியில் எடுத்துச் செல்ல நாம் விரும்பவில்லை. இதற்குள்ளேயே தீர்த்துக்கொள்ளவே விரும்புகின்றோம். எனவே, நேரில் கண்ட விடயங்கள் தொடர்பில் நீங்கள் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். இல்லையேல் விரும்பமில்லாவிட்டாலும்கூட இந்தப் பிரச்சினையை உயர்நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல நேரிடும். ஏனெனில் இந்த நாடாளுமன்றத்தை 'மிளகாய் தூள்' குழுவுக்கு நிர்வகிக்க இடமளிக்க முடியாது. இவர்களே கடந்த நாடாளுமன்றத்தையும் குழப்பினர் - என்றார்.

# பட்டினியால் மக்கள் சாவடையும் அவலம்

## அரசு மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு



நாட்டு மக்களை இந்த அரசு பட்டினியால் சாகடிக்கப்போகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் நாட்டு மக்கள் பாரிய கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்தக் கடன் சுமையால் நாட்டினதும், மக்களினதும் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடையும். ஐ.தே.க. ஆட்சியில் மூன்று வேளையும் உணவு உண்ட மக்கள் தற்போதைய ஆட்சியில் ஒரு வேளை உணவை உண்பதற்கும் சிரமப்படுகின்றனர்.

நல்லாட்சி அரசின் ஆட்சியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்பதற்கு உணவு இல்லை என்று மக்கள் எதிர்க்கட்சிகளிடம் குற்றம் சுமத்தியதில்லை. எனினும், தற்போது நாளாந்தம் மக்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்கியதால் நல்லாட்சி அரசை அவர்கள் கோழைகள் என்று வரையறுத்தனர். எனினும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசாகவே நாம் செயற்பட்டோம்.

பலருக்கு அது கோழைத்தனமாகத் தோன்றியது. அவ்வாறு எம்மைக் கோழைகள் என்று நினைத்தவர்களும் இப்போது இந்த அரசின் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எமது ஆட்சிக் காலத்தில் அரசை சமூக வலைதளங்களில் விமர்சிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அந்த வாய்ப்பும் இல்லை.

அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிடும் இளைஞர்கள் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறில்லை என்றால் குறித்த சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படுகின்றன. பொலிஸார் ஊடாக மக்களின் கருத்துச் சுதந்திரம் முடக்கப்படுகின்றது.

குரல் கொடுக்கக் கூடியவர்களை நாடாளுமன்றம் செல்ல மக்கள் அனுமதிக்கவில்லை. அவர்கள் செய்த செயலின் தீவிரத்தை மக்கள் இப்போது புரிந்துகொண்டுள்ளனர்.

இந்த அரசு முன்னோக்கிச் செல்லப் போவதில்லை. அரசின் முட்டாள்தனமான செயற்பாடுகளால் பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்குப் பெருமளவில் நிதியை ஒதுக்கும் இந்த அரசு தேவையான இடங்களில் பாலங்களை நிர்மாணித்துக் கொடுப்பதில்லை. இதன் காரணமாகவே கிண்ணியாவில் அந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

நிதி அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் செய்த போதிலும், அந்நாட்டிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசிடம் போதியளவு நிதி கையிருப்பில் இல்லை என்பதால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. சமையல் எரிவாயு சிலிண்டர்களை வீடுகளில் வைத்திருப்பவர்கள் வெடிகுண்டை வீட்டில் வைத்திருப்பதைப் போல் அச்சத்துடனேயே இருக்கின்றனர்.

இலங்கையில் மேற்கொண்டிருந்த முதலீட்டினை சீனா தற்போது மாலை தீவுக்கு வழங்கியுள்ளது. மறுபுறம் இந்தியாவும் எவ்வித ஒத்துழைப்புக்களையும் வழங்கவில்லை.

இதன் காரணமாகவே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க , நிதி அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். எனினும், அதற்கு அரசிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

நாட்டில் பாரிய டொலர் தட்டுப்பாடு நிலவுகின்றது. சர்வதேச ஒத்துழைப்புகள் பூச்சியமான நிலையில் உள்ளன. இலங்கையின் நிலையற்ற செயற்பாடுகளால் சீனாவும் சினம் கொண்டுள்ளது. மறுபுறம் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை மீது சினம் கொண்டுள்ளன.

இவ்வாறான நாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய முடியும்? கிணற்றுத் தவளை போன்ற பொருளாதாரத்தில் ஒருபோதும் முன்னேற முடியாது.

கொரோனாத் தொற்றின் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஏனைய பல நாடுகளும் பொருளாதார நெருக்கடியைச் சரியாக முகாமைத்துவம் செய்துள்ளன. இலங்கையில் அவ்வாறான பொருளாதார முகாமைத்துவம் இல்லை.

ஏனைய நாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கை பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் - என்றார்.

# மரண அறிவித்தல்

மண்ணில் 25 – 03 – 1933



விண்ணில் 09 – 12 – 2021

## ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை (Auto அக்கா)

நாரந்தனையை பிறப்பிடமாகவும், உடுவில், எகலியகொட (இரத்தினபுரி), கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை அவர்கள் வியாழக்கிழமை (09.12.2021) பி.ப 7.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை – செலஸ்ரினா அவர்களின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னட்டி – சீதேவன் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னட்டி ஆறுமுகம் (கிளி) அவர்களின் பாசமிகு மனைவியும், றொபட்ராஜா புஸ்பராணி (ராணி), அன்ரன் லூசிநாயகம் (பாபு) (Swiss), அன்ரன் ஜோசப் (கண்ணன்), காலஞ்சென்ற அலிஸ்ரன் மதுரநாயகம் (குமார்), அன்ரன் போல் (பாஸ்கர்) (ஆசிரியர் இரா/அல்–அக்ஷா மு.ம.வி, எகலியகொட, கே/புனித மரியாள் த.ம.வி., எட்டியாந்தோட்ட) (பிரதி அதிபர் ஹோ/இராஜகிரிய றோ.க.த.பா, இராஜகிரிய) (அதிபர், கொ/புனித. அந்தோனியார் ஆண்கள் கல்லூரி, கொச்சிக்கடை, கொழும்பு – 13) (பிரதி அதிபர் கொ/புனித.மரியாள் றோ.க.த.க.பா, பம்பலப்பிட்டி, கொழும்பு –04), அன்ரன் யூட் (சந்திரன்) (Swiss) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற றொபேட்ராஜா, காந்திமதி (Swiss), பிரேமலதா, காலஞ்சென்ற அமலராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், வினிஸ்ரன், சங்கீதாவின் அன்பு அம்மம்மாவும், டொமினிக் அலன் டொறின், டிலான் ஜொய்சி, அனோஜன், அருண் (Swiss), அஜித்தா (Swiss), ரஷ்னா எமிலி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 10.12.2021 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு மல்வம் / திருக்குடும்ப மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மல்வம் / திருக்குடும்ப மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்ரனி வாசா"
நாகம்மாள் வீதி, உடுவில்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
0212240914,
0777281617

# பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு கல்விக்கான உதவித் திட்டம்

கொழும்பு, டிசெம். 10

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பெற்றோரை இழந்த 20 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைக் கொவிட் - 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் யோசனைக்கு அமைய இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் தாய் அல்லது தந்தையின் இறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் சிறுவன் அல்லது சிறுமியின் பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, கிராம சேவையாளர் பிரிவு கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில், 'கொவிட் – 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து கல்விப் புலமைப் பரிசில்களை வழங்குதல்' என்று குறிப்பிடப்பட வேண்டும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, 'செயலாளர், கொவிட் – 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

## தமிழர்கள் எந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சுய மரியாதை கொண்டுள்ள எந்தவொரு தமிழரும் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியில் அங்கம் பெற முடியாது எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசின் நீதி அமைச்சர், ஆப்கானிஸ்தான் கப்பற்துறை அமைச்சர் போன்றதொரு நிலையில் உள்ளார் என கடந்த ஆண்டு நான் கூறியிருந்தேன். அதனையே நான் மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால் இன்றும் அவர் உறுதியில்லாத நிலையில் இந்த அமைச்சில் உள்ளார். நீதி அமைச்சர் தனது அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்ய முயற்சித்துக் கொண்டுள்ளார் என்று கடந்த காலங்களில் ஊடகங்களில் அறிந்துகொண்டோம். அவர் தனது அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்ய முயற்சித்தும் அதனைச் செய்ய முடியாத நிலையொன்றில் உள்ளார். ஆனால், அவரால் அதனைச் செய்ய முடியும். எனினும், அதனை எவ்வாறு செய்ய முடியும் எனத் தெரியாத நிலையில் அவர் உள்ளார் என்றே நாம் நினைக்கின்றோம்.

அதேபோல் நீதி செயற்பாடுகளில் அரசின் அநாவசிய தலையீடுகள் காணப்படுகின்றன என்பது தெளிவாக வெளிப்பட்டுள்ளன. முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவை வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கவுள்ளதாக செய்திகளில் அறிந்துகொண்டேன். காலஞ்சென்ற முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்குப் பதிலாக இவர் நியமிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. காலஞ்சென்ற முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில் 11 இளைஞர் கடத்தல் மற்றும் திருகோணமலை கடற்படை முகாமில் அவர்களைக் கொலை செய்த வழக்கில் வசந்த கரன்னகொட சந்தேக நபராக உள்ளார். அவ்வாறான ஒருவரை சட்டமா அதிபர் அவசர அவசரமாக நியாயப்படுத்தி, அவரது வழக்குகளை நீக்கி அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கின்றார்.

இறந்தவர்களின் குடும்பத்தினர் இந்தச் செயற்பாடுகளுக்கு நியாயம் கோரி போராடிக்கொண்டுள்ள நிலையில் அதற்கான தீர்ப்பு கிடைக்கும் என நீண்ட காலமாகக் காத்திருந்து ஓரளவேனும் நீதி நிலைநாட்டப்படும் சூழ்நிலை உருவாக்கி வந்த நிலையில் மீண்டும் வழக்கு பின் வாங்கப்பட்டுள்ளது. அவரை ஆளுநராக நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரங்கள் மீளப்பெற்றுக் கொள்ளப்படுகின்றன. சட்டமா அதிபர் உண்மையில் சுயாதீனநபராக இருக்க வேண்டும், அரசியல் நியமனமாக இருந்தாலும் கூட செயற்பாடுகள் சுயாதீனமாக இருக்க வேண்டும். ஆனால், அதனை அவதானிக்க முடியவில்லை.

அதேபோல் நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்த, இன்னொரு வழக்கில் சந்தேக நபராக உள்ள ஒருவரை செயலணி ஒன்றின் தலைவராக அரசாங்கம் நியமித்துள்ளது. இதற்கு நீதி அமைச்சர் எதிர்ப்பை வெளிப்படுத்தியும் அதில் மாற்றம் ஏற்படவில்லை. அதேபோல் தமிழர்கள் இந்தச் செயலணியில் நியமிக்கப்படவில்லை. அது நல்ல விடயம் என்றே கருதுகின்றேன். சுயமரியாதையை கொண்டுள்ள எந்த தமிழரும் இந்த செயலணியில் அங்கம் பெற முடியாது. ஒரு சிலர் தமது சுயமரியாதையை இழந்து இந்தச் செயலணியில் உள்ளனர். ஆனால், ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையில் உள்ள இந்த செயலணி ஒரு அநீதியான செயலணியாகும்.

அதிகாரப் பரவலாக்கலை முன்னெடுப்போம் என இந்தியாவுக்கு மூன்று சந்தர்ப்பங்களில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி வழங்கியுள்ளார். அதேபோல் ஐக்கிய நாடுகள் சபையில் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட அறிக்கையிலும், சர்வதேச சமூகத்துக்கும் தொடர்ச்சியாக இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். அதிகாரப் பரவலாக்கலைக் கண்டிப்பாக முன்னெடுப்போம் எனக் கூறி, 13 ஆம் திருத்தத்தின் மூலமாக இதனைக் கையாள்வோம், மாகாணசபை முறைமையின் ஊடாக அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்வோம், மாகாணங்களுக்கு ஏற்ற சட்டங்களை அவர்களே உருவாக்கும் அதிகாரத்தை வழங்குவோம் எனக் கூறி உள்ளக அதிகாரங்களைப் பரவலாக்கி மேம்படுத்த, மாகாணங்களுக்கு சட்டங்களை மேம்படுத்த, அதிகாரம் வழங்குவதாக உலகத்துக்கு வாக்குறுதி வழங்கிவிட்டு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையை வகுப்பது நியாயமான ஒன்றல்ல. இதுதற்போதைய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முரணானது மட்டுமல்லாது, சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறும் செயற்பாடாகும்.

ஆகவேதான் இந்த செயலணியில் சுய மரியாதையுடன தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்க முடியாது. அதுமட்டுமல்ல இந்தச் செயலணி உருவாக்கப்பட்ட வேளையில் கூட சுயமாக இதற்கு தமிழர்களை ஜனாதிபதி நியமிக்கவில்லை. அப்படியென்றால் அவர்கள் கூற நினைப்பது என்ன? எம்மைப்பின் சிந்திக்கும் பட்டியலில் வைத்துள்ளார்கள் என்பதேயாகும்.

இந்த நாட்டில் எமக்கும் சம உரிமைகள் உள்ளன. இது எமது நாடு, இங்கு நாம் எந்தவொரு இனத்தவருக்கும் அடுத்த படியான மக்கள் அல்ல. எனவேதான் இதனை நாம் கண்டிக்கின்றோம். அதேபோல் நீதி அமைச்சரும் எமது சமூகத்தில் இருந்து வந்தவர் என்ற காரணத்தால் நீங்கள் இந்த விடயங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் இந்த அரசில் இருந்து கொண்டு உங்கள் சமூகத்துக்கு எதிராகச் செயற்பட முடியாது. எனவே, நீங்கள் அமைச்சுப் பதவியைத் துறந்து வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## 'பட்ஜட்' மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

2022ஆம் நிதியாண்டுக்கான பாதீடு, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் நவம்பர் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது.

நவம்பர் 13ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை 7 நாள்கள் இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் நடைபெற்று, 22ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்படி 2ஆம் வாசிப்பு மேலதிக 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 73 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்பின்னர் நவம்பர் 23ஆம் திகதி முதல் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை (மூன்றாம் வாசிப்பு) ஆரம்பமானது.

இன்று வெள்ளிக்கிழமை நிதி அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. இதன்போது பதிலளித்து உரையாற்றவுள்ள நிதி அமைச்சர் பாதீட்டில் திருத்தங்கள் செய்ய இருப்பின் அவை தொடர்பான அறிவிப்புகளை விடுப்பார். அதன்பின்னர் மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன எதிராக வாக்களித்தன. அரசும் அதன் தோழமைக் கட்சிகளும் ஆதரவாக வாக்களிக்கவுள்ளன.

## சர்ச்சைக்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மனிதாபிமான நடவடிக்கைகளின்போது கடற்படைத் தளபதியாக விளங்கிய வசந்த கரன்னாகொட, தாய்நாட்டுக்காக அர்ப்பணிப் புடன் பணியாற்றியவராவார். அத்துடன், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவரா கவும் அவர் சேவையாற்றியுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராகவிருந்த ராஜா கொல்லுரேவின் மறைவை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே, வடமேல் மாகாணப் புதிய ஆளுநர் பதவிக்கு வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கரைதுறைப்பற்றின் பட்ஜட் ஏகமனதாக நிறைவேற்றம்



முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் கூட்டம் நேற்று நடைபெற்றது. தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது.

உறுப்பினர்கள் 24 பேர் அங்கம் பெறும் குறித்த சபையின் நேற்றுமுன்தினம் அமர்வில் உறுப்பினர்கள் நால்வர் சமூகமளிக்கவில்லை. நடைபெற்ற வாக்கெடுப்பின்போது உறுப்பினர்கள் 20 பேர் சமூகமளித்திருந்த நிலையில் அனைவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

## 22 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 555 ஆக அதிகரித்துள்ளது.

## மின்சார வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை சுரங்கப்பாதைக்கு கீழ் உள்ள சாந்த ஜனபதய எனும் பகுதியில் வீட்டுக்குப் பின்புறத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே மேற்படி தாய் பலியாகியுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஏ.எம்.சந்திரலதா (வயது 48) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டார்கள் தங்களது மரக்கறித் தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியை சட்டவிரோதமாகப் பொருத்தியுள்ளனர்.

குறித்த பெண் ஒவ்வொரு நாளும் தோட்டத்துக்குச் செல்லும்போது மின்சாரத்தைத் துண்டித்து விட்டுச் செல்வது வழமை எனவும், நேற்று அதனைத் துண்டிக்காது மறந்து சென்றதால் குறித்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் பிரதேசவாசிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதிவானின் மேற்பார்வையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ,

மேற்படி கைதிகளின் விடயத்தில், உரிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும், விடுதலை தொடர்பிலும் அரசு பொறுப்புடையதாக உள்ளது.

அது ஒரு முறைமையிலானது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதனைச் செய்வதற்கான சட்ட நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். நீதி அமைச்சர் அதற்காகச் செயற்படுகின்றார்.

முதல் முறையாக நாம் அதனைச் செய்ய முடியும். அதனைச் செய்வோம். முன்னரும் அதனை நாம் செய்துள்ளோம். அரசியல் ரீதியான அறிவிப்பை நாம் வெளியிட மாட்டோம். ஏனெனில், அது எமது அரசியல் வாக்குறுதி அல்ல.

அரசியல் கட்சி என்ற அப்படையில், நீங்கள் எங்களுக்கு உதவி செய்வதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன், நீங்கள் ஒருபோதும் எங்களுக்கு உதவமாட்டீர்கள்.

ஆனால், நாட்டின் பிரஜை என்ற அடிப்படையிலும், அரசு என்ற அடிப்படையிலும் எங்களுக்குப் பொறுப்பு உள்ளது. அதனை நாங்கள் நிறைவேற்றுவோம் – என்றார்.

## வேகமாகப் பரவாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தனது ருவிட்டர் தளத்தில் இதை அவர் பதிவிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒமைக்ரோன் வகை திரிவு இலங்கையிலும் பிற நாடுகளிலும் வேகமாகப் பரவாது. ஒமைக்ரோன் வகை குறித்துத் தென்னாபிரிக்க விஞ்ஞானிகள் குழு நடத்திய சோதனையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒமைக்ரோன் வைரஸ் தடுப்பு மருந்துகளுக்கு பதிலளிக்கவில்லை என்றாலும், பூஸ்டர் தடுப்பூசியிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த வைரஸ் மாறுபாடு பற்றி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரவில்லை. இது தொடர்பான தரவுகளைப் படிக்க அதிக நேரம் தேவைப்படுகின்றது – என்றுள்ளது.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்யப்பட்டதமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அநியாயமாக சிறைகளில் வாடுகின்றனர். கடந்த காலத்தில் போரில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களில் சுமார் 12 ஆயிரம் பேர் போர் முடிவின் பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், அதைவிட சிற்சில காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள், இன்னும் குற்றப்பத்திரிகைகள் கூட தாக்கல் செய்யப்படாமல் தசாப்தகாலமாக சிறையில் வாடுகின்றனர். அவர்களின் விடுதலையிலும் கவனம் எடுக்குமாறு நீதி அமைச்சரிடம் வேண்டுகின்றேன்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூட அண்மையில் பேசும்போது, இந்த விடயத்தைக் கட்டம்கட்டமாக முன்னெடுப்போம் என உறுதியளித்தார். நான் சிறையில் இருக்கும்போது என்னிடம் வந்து அவர்கள் வேதனைப்பட்டனர். அவர்களின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பல வழக்குகள், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் அல்லது விசாரணையின்றியும் இருக்கின்றன. சிங்கள இளைஞர்கள் கூட இந்தச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு, சிறையில் காலத்தைக் கடத்துகின்றனர்.

தமிழ் இளைஞர்கள் பலரின் எதிர்காலமும் கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது. கடந்த இரண்டு வருட காலத்துக்குள் சுமார் 40 அல்லது 50 இளைஞர்கள், 'புலிகளின் மீளெழுச்சியில் தொடர்புபட்டார்கள்' எனக் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

20, 22 வயது நிரம்பிய இந்த இளைஞர்களுக்கு விடுதலைப்புலிகள் தொடர்பில் பெரிதாக தெரிந்திருப்பது நியாயமில்லை. ஏனெனில், 2009 இல் போர் முடிந்த போது, அவர்கள் சுமார் 10 வயது நிரம்பியோர்களாகவே இருந்திருப்பர். வட்ஸ்அப் களிலும், சமூக வலைத்தளங்களிலும் வருகின்ற செய்திகளைப் பரிமாறியதற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த இவர்களுக்கு வழக்காடுவதற்குக் கூட வழி இல்லை. எனவே, அவர்களின் விடுதலையிலும் சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

# யாழ். மாநகர சபையின் பட்ஜட் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும்

## முதல்வர் அசகாய நம்பிக்கை




வரவு - செலவுத் திட்டம் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருக்கின்றதென யாழ்.மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.நாயன்மார்கட்டு குளப்புனரமைப்பு பணிகள் நேற்று யாழ் மாநகர முதல்வர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

வரவு - செலவுத் திட்ட தயாரிப்பின் போது அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளையும் உள்ளடக்கியே தயாரித்து இருக்கின்றோம். ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகளை உள்ளடக்கிய வரவு - செலவுத் திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

யாழ்.மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும் 'மாநகர சபையில் முன்வைக்கப்படுகின்ற வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும்' என நான் பகிரங்கமாகவும் அன்பாகவும் ஒரு கோரிக்கையை விடுக்கின்றேன்.

மாநகர சபை வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கும் முகமாக கட்சித்தலைவர்கள் செயற்படமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன். - என்றார்.

# மொரகொல்ல பாடசாலைக்கான பாதையை அமைத்துக்கொடுத்த செந்தில் தொண்டமான்






மழைக் காலத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டு மாணவர்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்ட மொரகொல்ல பாடசாலைக்கான பாதையை இ.தொ.காவின் உப தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் புனரமைத்து கொடுத்துள்ளார்.

மாணவர்களே நாட்டின் நாளைய சொத்துக்கள். மாணவர்களை பாதுகாத்து அவர்களை வழிநடத்த வேண்டியது நமது பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொரகொல்ல பாடசாலைக்கான பாதை மழைக் காலப்பகுதியில் பாதிக்கப்பட்டு சறுக்கும் காரணத்தால் மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்ல முடியாத சூழல் தொடர்ந்து காணப்பட்டது.

இது தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் செந்தில் தொண்டமானிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய குறித்த பாதை புனரமைக்கப்பட்டுள்ளது.

செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழ். நாயன்மார்கட்டு குளத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு குளம் புனரமைப்பு மாதிரி திட்ட வரைவை நேற்று (வியாழக்கிழமை) யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் வெளியிட்டு வைத்தமையுடன், அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உட்பட்ட குளங்களை தூர்வாரி, அழகுபடுத்தும் செயற்திட்டங்கள் முன்னெடுத்து வரப்படும் நிலையில், அதன் ஓர் அங்கமாக யாழ்.மாநகர சபையின் தூய அழகிய நகர துரித அபிவிருத்தி திட்டத்தின் மற்றொரு செயற்பாடாக நாயன் மார்கட்டு குளம் புனரமைக்கப்பட வுள்ளது.

அந்நிலையில் குளத்தின் புனரமைப்பு மாதிரி திட்ட வரைவை முதல்வர் மக்கள் பார்வைக்கு வெளியிட்டு வைத்துள்ளார்.

இதேவேளை, முன்னதாக யாழ்.நகர் மத்தி பகுதியில் அமைந்துள்ள ஆரிய குள புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதன் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்து கடந்த 2ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடந்த புதன்கிழமை ஈச்ச மோட்டை மறவன்குளம் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில், நேற்று நாயன்மார்கட்டு குள புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த குளங்கள் புனரமைப்புப் பணிகளுக்கு தியாகி அறக்கொடை நிறுவுநர் நிதி பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் தாக்கல் செய்த ரிட் மனு ஒத்திவைப்பு!



அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கண்டறிதல் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றைச் செயற்படுத்துவதை இடைநிறுத்துமாறு கோரி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்த ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஆதரவிற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, நீதியரசர் தேவிகா அபேரத்ன மற்றும் நீதியரசர் டி.எம்.சமரகோன் ஆகியோரை உள்ளடக்கிய குழு, குறித்த மனுவை ஜனவரி 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது மனுவில், மனுதாரர் தொடர்பான 17 - 51 பக்கங்களில் உள்ள கண்டறிதல் மற்றும் பரிந்துரைகளின் செயற்பாட்டை இடைநிறுத்த இடைக்கால உத்தரவைக் கோரியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சந்திரசிறி ஜயதிலக மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஆணைக்குழுவின் செயலாளர் பேர்ல் வீரசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர பிரதிவாதிகள்.

கடந்த 2020 செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி, ஜனாதிபதி ஆணைக்குழுவில் தான் கலந்துகொண்டேன் எனவும் தான் பிரதிவாதியாகக் கருதப்படவில்லை என்றும் சாட்சியாக மாத்திரம் கருதப்படுகிறேன் எனவும் தாகவும் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டதாக விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மனுதாரர், தனக்கு எதிராக எந்தக் கண்டறிதலும் பரிந்துரைகளும் செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் கண் டறிதல் மற்றும் பரிந்துரைகள் உள்ளன என்று மனுதாரர் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின்போது, நீதி விதிகள் முழுமையாக மீறப்பட்டுள்ளன எனவும் தமக்கு முறையான விசாரணைகள் வழங்கப்படவில்லை எனவும் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும் தனக்கு எதிராக சேகரிக்கப்பட்ட விடயங்கள், பகுத்தறிவற்ற மற்றும் தன்னிச்சையானவை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா முன்னிலையாகி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2021 இல் வெளியிடப்பெற்றது.